விலை ரூபா: 8.00

*Registered as a Newspaper in Srilanka*

# வலம்புரி
*Valampurii*

பக்கங்கள்:- பன்னிரண்டு

சங்கு 06 வள்ளுவர் ஆண்டு 2036 ஆவணி 08 புதன்கிழமை (24.08.2005) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 248

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது
சீமெந்து

# புலிகள் பேச்சுக்குத் தயார்
# அரசுக்கு நோர்வே அறிவிப்பு

## இடம், திகதி விரைவில்

(கொழும்பு)

**யுத்த நிறுத்த உடன்படிக்கையை முழுமையாக அமுல்படுத்துவது தொடர்பில் அரசாங்கப் பிரதிநிதிகளுடன் பேச்சுக்களை நடத்துவதற்கு விடுதலைப்புலிகள் தயாராக இருப்பதாக அரசாங்கத்திற்கு நோர்வே அறி வித்துள்ளது.**

**இத்தகவலை அரசிற்கு அறிவித்து விட்டதாக நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கீசன் நேற்றுத் தெரிவித்தார்.**

நேற்று முன்தினம் திங்கட் கிழமை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவை தொலைபேசி யின் ஊடாக தொடர்பு கொண்ட நோர்வே வெளிவிவகார அமைச் சர் ஜான் பீற்றர்சன், விடுதலைப்புலி களின் அரசியல் ஆலோசகர் அன் ரன் பாலசிங்கத்துடன் லண்டனில் நடைபெற்ற (12ஆம் பக்கம் பார்க்க)

## பரீட்சைப் பெறுபேறுகள் செப்.8இல் வெளியாகும்

(கொழும்பு)

க.பொ.த உயர்தரப் பரீட்சை யின் பெறுபேறுகள் செப்ரெம்பர் மாதம் 8ஆம் திகதி வெளியிடப்படு மென்று பரீட்சைத்திணைக்கள ஆணையாளர் நாயகம் அநுரா எதிர சிங்க தெரிவித்துள்ளார்.

இதேவேளை கடந்த 20 ஆம் திகதி நடைபெற்ற 5ஆம் ஆண்டு புலமைப்பரீட்சையின் பெறுபேறு கள் செப்ரெம்பர் மாத இறுதியில் வெளியிடப்படும்.

பரீட்சை வினாத்தாள்கள் திருத் தும் பணிகள் தற்போது நடைபெற்று வருவதாகவும் அவர் மேலும் தெரி வித்தார். (ந)

## லக்ஸ்மன் கதிர்காமரின் கொலையை கண்டித்து ஜே.வி.பி.ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

வெளிவிவகார அமைச்சர் லக்ஸ் மன் கதிர்காமரின் கொலையினை கண்டித்தும் அக்கொலைக்கு விடு தலைப்புலிகளே காரணம் என்வும் கூறி தலைநகர் கொழும்பு கோட் டைப்பகுதியில் ஜே.வி.பியினர் நேற்றுப் பிற்பகல் ஆர்ப்பாட்டம் ஒன்றினை நடத்தியுள்ளனர்.

லக்ஸ்மன்கதிர்காமரின்கொலைக் கும் தங்களுக்கும் எதுவித தொடர் பும் இல்லையென்று விடுதலைப் புலிகள் தெரிவித்து வரும் நிலை யில் ஜே.வி.பியின் நேற்றைய ஆர்ப் பாட்டம் இடம் பெற்றுள்ளது.

அமைச்சரின் கொலையில் பாதுகாப்பு விவகாரங்களில் கவனக் குறைவு இருந்ததாக அரச அதிகா ரிகள் ஒத்துக்கொண்டனர். இருந் தும் பாதுகாப்பில் இருந்த கவனக் குறைவை கண்டிக்கும் வகையில் ஆர்ப்பாட்டத்தினை நடத்தாமல் விடு தலைப்புலிகளை கண்டித்து நடத் தியமை சமாதானச் சூழலினை பாதிக்குமென இராஜதந்திர வட்டா ரங்கள் தெரிவித்துள்ளன. (ந-4)

## எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில்
## ஆளுங் கூட்டணிக் கட்சிகள் மகிந்தவுக்கு ஆதரவு வழங்கத் தயார்



(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்த லில் சுதந்திரக்கட்சியின் ஜனாதி பதி வேட்பாளர் மகிந்த ராஜபக்ஷ வுக்கு ஆதரவு வழங்க ஆளும் கூட்டணிக்கட்சிகள் முன்வந்துள் ளன.

கொழும்பில் நேற்று நடை பெற்ற ஊடகவியலாளர் மாநாட் டில் ஆளும் கட்சிகள் தமது ஏகோபித்த ஆதரவைத் தெரிவித்துள்ளன.

இவ் மாநாட்டில் மக்கள் ஐக்கிய முன்னணி, சிறிலங்கா சுதந்திரக் கட்சி, சிறிலங்கா கொம்யூனிஸ்ட் கட்சி, தேசிய விடுதலை மக்கள் கட்சி, தேசிய முஸ்லிம் காங்கிரஸ், சிறிலங்கா மக்கள் கட்சி உட்பட மேலும் பல கட்சிகள் கலந்து கொண் டன. மாநாட்டில் அமைச்சர்களான மங்கள சமரவீர , டி.எம்.ஜெயரட்ண டியு.குண சேகர, தினேஸ் குணவர்த் தன ஆகியோர் கலந்துகொண்ட னர். மாநாட்டில் கலந்துகொண்ட அமைச்சர் தினேஸ் குணவர்த்தன, நாட்டின் சுபீட்சத்திற்கு ஒத்துழைப்பு வழங்குதற்கு முற்போக்கு சக்திக ளுக்கு கூடிய சந்தர்ப்பம் உண்டு என தெரிவித்தார். (ந-8)

## செய்தியாளர் தாக்கப்பட்டார்

(கொழும்பு)

கொழும்பு கோட்டைப் புகையி ரத நிலையம் முன்பாக நேற்று மாலை விடுதலைப்புலிகளுக்கு எதிராக ஜே.வி.பியினரால் ஏற்பாடு செய்யப்பட் ஆர்ப்பாட்டத்தில் ,செய்தி சேகரிக்கச் சென்ற சுடரொளி செய் தியாளர் பிரேமச்சந்திரன் யதூசன் ஜே.வி.பி.வன்முறையாளர்களி னால் தாக்கப்பட்டார்.

அத்துடன்அவரது புகைப்படக் கருவியையும் ஆவணங்களை யும் சேதப்படுத்தியதுடன் புலி உறுப் பினர் எனக்குற்றம் சுமத்தி அவரை பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். (04,08)

## 21 சிறுவர்களை விடுதலைப்புலிகள் பெற்றோர்களிடம் ஒப்படைத்தனர்

தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பில் இணைய முன்வந்த 21 சிறுவர்கள் அவர்களின் பெற் றோர்களிடம் நேற்று செவ்வாய்க் கிழமை ஒப்படைக்கப்பட்டனர்.

வடக்கு கிழக்கு மனித உரிமை கள் செயலகத்தில் வணபிதா கரு ணாரட்ணம் அடிகளாரின் தலை மையில் முற்பகல் 11.30மணியள வில் இச் சிறுவர்கள் ஒப்படைக்கப் பட்டனர். இந்நிகழ்வில் ஐ.நா மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் செயலகப்பணிப்பாளர் மு.பாவரச னும் கலந்து கொண்டார். இச் சிறு வர்கள் தமது சொந்த விருப்பத் தில் விடுதலைப்புலிகள் அமைப்பில் இணைய முன்வந்தனர். இருந்தும் இவர்கள் 18வயதிற்கு உட்பட்டவர் கள் என்ற காரணத்தினால் தேசி யத்தலைவரின் பணிப்பின் பேரில் அவர்களின் பெற்றோரிடம்கைய ளிக்கப்பட்டதாகவும் வடக்கு கிழக்கு மனித உரிமைகள் செயலகப் பணிப்பாளர் வணபிதா கருணா ரட்ணம் அடிகளார் தெரிவித்தார்.

இவர்களில் 7சிறுவர்கள் பெற் றோரிடம் செல்ல முடியாதென கடு மையாக மறுப்புத் தெரிவித்ததால் இவர்கள் தொழிற்பயிற்சி நிலை யத்தில் ஒப்படைக்கப்பட்டனர்.(ந-4)

## அவசர காலச் சட்டத்தால் படையினருக்கு கூடிய அதிகாரம்
### சட்டவல்லுநர்கள் கருத்து

(கொழும்பு)

நாட்டில் கடந்த வாரம் நீடிக்கப் பட்ட அவசர காலச்சட்டத்தினால் ஆயுதப்படைகளும் பொலிஸாரும் சந்தேகத்திற்குரிய எவரையும் கைது செய்யவும் காவலில் வைக்கவும் அதிகாரம் பெற்றுள்ளனர்.

இவ்வாறுசெய்வதற்குபிடியாணை அவசியமில்லை.எந்த வாகனத்தை யும் சோதிக்கவும் கைப்பற்றவும் எடுத்துக்கொள்ளவும் பாதுகாப்பில் வைக்கவும் அதிகாரமுண்டு.

ஒரு நபரை இவ்வாறு 90 நாட் கள் வரை காவலில் வைத்திருக்க முடியும் என சட்டவல்லுநர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

கூட்டங்கள், ஆர்ப்பாட்டங்களை குறிப்பிட்ட காலத்திற்கு தடைசெய் யும் படி ஆயுதப்படைகளுக்கு உத் தரவிடவும் பிரசுரங்கள் பத்திரிகை களை தணிக்கை செய்வதற்கான தகுதிபெற்ற அதிகாரி ஒருவரை நியமிக்கவும் ஜனாதிபதிக்கு அதி காரமுண்டு. துண்டுப்பிரசுரங்களை விநியோகிப்பதும் அவற்றைபொது இடங்களில் ஒட்டுவதும் இதில் அடங் கும். பொய்யான அறிக்கை களை வெளியிடுவது வதந்திகளை பரப்புவது பாதுகாப்பு மற்றும் தற் காப்பு சம்பந்தமான ஆவணங்க ளை வெளியிடுவது ஆகியனவும் இந்த அதிகாரத்தின் கீழ் குற்றமாக கருதப்படும். (ந-4)

EXPOAIR
your friend in the skies...
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள்
021 - 222 3891, 222 6297, 0777-2349
011-2372952-3, 011-2360290, 011 - 2360291
e.mail:- jaffna@expoavi.com, reservations@expoavi.com.
எக்ஸ்போ எயார்
வானத்தில் உங்கள் நண்பன்...
இலங்கையில் முன்னணி வகிக்கும் உங்கள் உள்ளூர் விமான சேவை..


நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# நெய் திரளும் நேரத்தில் தாழியை உடைத்துவிட்டார்

## ஜனாதிபதிமீது லொக்குகே குற்றச்சாட்டு

(கொழும்பு)

ஐக்கியதேசியக்கட்சி அரசாங்கத்தை ஆட்சியிலிருந்து ஜனாதிபதி தனது நிறைவேற்றதிகாரத்தைப் பயன்படுத்தி கலைத்ததினால் யுத்தநிறுத்த ஒப்பந்தத்தின் மூலம் உரிய பயன்களை பெற்றுக்கொள்ள முடியவில்லையென ஐக்கியதேசியக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் காமினி லொக்குகே தெரிவித்துள்ளார்.

யுத்தநிறுத்த ஒப்பந்தத்தில் சிலகுறைபாடுகள் காணப்பட்டதும் அவற்றை தீர்ப்பதன்மூலம் இந்த திட்டத்தைக்கொண்டு செல்லும் பலம் ஐக்கியதேசியக் கட்சி அரசாங்கத்திடம் இருந்ததாகவும் கூறினார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற மாநாடு ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து பேசுகையில்,

அன்று ரணில் விக்கிரம சிங்க போர்நிறுத்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட போது யுத்த நிறுத்த மேற்படுமென யாரும் நினைக்கவில்லை. அவருடைய காலத்திலேயே யுத்தம் நிறுத்தம் ஏற்பட்டது ஆனால் சமாதானம் கிட்டவில்லை. சமாதானத்தை அடைய பேச்சுவார்த்தைப் பாதைக்கு செல்ல வேண்டும் அந்தப்பாதையில் ஏற்பட்ட முன்னேற்றமும் இடைநடுவில் நிறுத்தப்பட்டது.

யுத்தம் செய்த குழுவொன்றும் ஜனநாயக முறைமைக்கு மதிப்பளித்த குழுவொன்றும் இணைந்து பேச்சுவார்த்தை நடாத்தும்போது சில முரண்பாடுகளும் பிரச்சினைகளும் தோன்றுவது இயல்பு.

பிரச்சினைகள் இல்லாமல் இவ்வாறான பேச்சுவார்த்தைகள் எதுவும் உலகில் இடம்பெறுவதில்லை எனினும் ஐக்கிய தேசியக்கட்சி தனது முயற்சியை கைவிட்வில்லை நாங்கள் விடுதலைப் புலிகளுடன் ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திடும் கட்டத்தை நெருங்கிக் கொண்டிருந்தோம் புலிகள் தமக்கு இடைக்கால நிர்வாகசபை ஒன்று தேவையென கூறியிருந்தார்கள். இது தொடர்பான யோசனையை சமர்ப்பிக்குமாறு ஐக்கியதேசியக்கட்சி கோரியது.

ஒஸ்லோவிலும் டோக்கியோவிலும் அவர்களுடன் ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திட்டோம் இதன் போது நாம் ஒரு கட்டமைப்புக்கு இணங்கியிருந்தோம் இந்த கட்டமைப்பில் சில விடயங்களைக் கொடுத்திருக்கலாம். இந்த சந்தர்ப்பத்தில்தான் ஜனாதிபதி நாம் இடைக்கால நிர்வாகசபையை கொடுக்கப்போகின்றோம் எனப் பொய்ப்பிரசாரங்களை மேற்கொண்டு எமது ஆட்சியை கலைத்தார் என்று அவர் மேலும் தெரிவித்தார். (து-8)

## எச்சரிக்கை

(ஊர்காவற்றுறை)

தீவக நலன் பேணுவோரால் எச்சரிக்கைகைத் துண்டுப் பிரசுரம் ஒன்று தீவகம் முழுவதிலும் ஒட்டப்பட்டுள்ளன. கொலை, கொள்ளை, கற்பழிப்பு விபச்சாரம், கசிப்பு போன்ற முறைகேடான மது விற்பனை, சமூக விரோத செயல்கள், தேச விரோத செயல்கள் போன்ற குற்றச் செயல்களில் ஈடுபடுவோர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படுமென அந்த துண்டுப் பிரசுரத்தில் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (அ)

## குடிதண்ணீர் தட்டுப்பாடு

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறைப்பகுதியில் மெலிஞ்சிமுனை, தம்பாட்டி ஆகிய கிராமங்களில் கொடிய வரட்சி நிலவுவதால் குடிதண்ணீருக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

மக்கள் வெகு தூரங்களுக்கு சென்று நன்னீர் கிணறுகளில் தண்ணீர் எடுத்து வருவதைக் காணக்கூடியதாக இருக்கின்றது. இங்குள்ள தண்ணீர் குழாய்களில் தண்ணீர் குறைவாக வருவதாகவும் தெரியவருகின்றது. (அ)

## காணாமற் போனவர்களுக்கான மரண அத்தாட்சிப் பத்திரங்கள்

இன வன்முறைகள் மற்றும் தீவிரவாத செயற்பாடுகள் காரணமாக காணாமல் போனவர்களுக்கான மரண அததாட்சிப்பத்திரங்களை இதுவரை பெற்றுக்கொள்ளாத உறவினர்களுக்கு அவற்றை வழங்கப் பதிவாளர் நாயகம் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

சுனாமி அனர்த்தத்தினால் காணாமல் போனவர்களுக்கான மரண அத்தாட்சிப் பத்திரங்களை அவர்களது உறவினர்களுக்கு விநியோகிக்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பதிவாளர் நாயகம் சி.கே.ரத்ன சிறி தெரிவித்துள்ளார். இது தொடர்பில் மரண அத்தாட்சிப்பத்திரங்களை வழங்குவதற்காக தற்காலிக ஒழுங்குகள் சட்டம் மறு சீரமைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். இதன்படி 1988ஆம் ஆண்டு முதல் காணாமல் போனவர்களுக்கான மரண அத்தாட்சிப்பத்திரங்களை பெற்றுக்கொள்ளாத குடும்ப உறுப்பினர்கள் இப்பொழுது மரண அத்தாட்சிப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்ள முடியும்.

இது தொடர்பாக சம்பந்தப்பட்ட மாவட்ட செயலாளர்கள். பிரதேச செயலாளர்களுக்கு சுற்றுநிருபத்தின் ஊடாக அறிவுறுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் பதிவாளர் நாயகம் தெரிவித்துள்ளார். (து-9)

## மலையக இளைஞர் ஆசிரிய நியமனப் பரீட்சை முடிவுகளை வெளியிட உயர்நீதிமன்றம் தடை

(கொழும்பு)

தமிழர்கள் பெரும்பான்மையாக வாழும் பெருந்தோட்டத் துறையில் தோட்ட இளைஞர் யுவதிகள் சுமார் மூவாயிரம் பேருக்கு ஆசிரியர் நியமனம் வழங்குவதற்காக நடாத்தப்பட்ட பரீட்சையின் முடிவுகளை வெளியிடுவதற்கு உயர் நீதிமன்றம் நேற்று முன்தினம் தடைஉத்தரவு விதித்துள்ளது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் மத்திய மாகாணசபை உறுப்பினர் ஒருவர் இது தொடர்பில் மனுத்தாக்கல் செய்திருந்தார்.

குறிப்பிட்ட நியமனங்களுக்காக கோரப்பட்டுள்ள விண்ணப்பங்களில் இந்து மற்றும் கத்தோலிக்க மத பாடங்களில் சித்தியடைந்தோர் மாத்திரமே பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கப்பட்டார்கள். எனவே, இது இஸ்லாம் மற்றும் பௌத்த மத பாடங்களில் சித்தியெய்தியோரின் அடிப்படை உரிமையை மீறும் செயல் என மனுதாரர் தமது மனுவில் குறிப்பிட்டிருந்தார்.

இந்த நிலையில் இதனை நேற்று முன்தினம் விசாரணை செய்த உயர் நீதிமன்றம், உயர் நீதிமன்றத்தில் இவ்விடயம் தொடர்பாக மனு வொன்று தாக்கல்செய்யப்பட்ட நிலையில் குறித்த பரீட்சையை நடாத்தியது தவறு எனத் தெரிவித்துள்ளது. (அ-7)

## இராசிபலன்

24.08.2005

(ஆவணி 8, புதன்கிழமை)

பஞ்சமி பிற்பகல் 3.11 மணிவரை

அச்சுவினி பின்னிரவு 2.25 மணிவரை

இராகுகாலம் 12.05 - 1.35 மணிவரை

சுபநேரம் 04.35 - 6.05 மணிவரை

| | |
|---|---|
| மேடம் | சிந்தனை மிகுதி, நல்ல முயற்சி, நண்பர்கள் சந்திப்பு, போசன நன்மை. |
| இடபம் | காரிய அலைச்சல், சுபசெலவு, மனஸ்தாபம், சயனசுகக்குறைவு. |
| மிதுனம் | சுப நிகழ்வு, காரிய சித்தி, பொருள் சேர்க்கை, நல்ல வரவேற்பு. |
| கடகம் | கடின முயற்சி, போசன நன்மை, நல்ல செய்தி, உறவினர் உதவி. |
| சிங்கம் | கட்டுப்பாடு, புதிய முயற்சி, பிரயாணம், பித்தரோகம். |
| கன்னி | அபகீர்த்தி, காரிய தடங்கல், ஆரோக்கியக் குறைவு, பிரயாண பயம். |
| துலாம் | களஸ்திர நன்மை, எடுத்த காரியம் கைகூடும், செல்வாக்கு, தனலாபம். |
| விருச்சிகம் | நல்ல சம்பவம், தொழில்விருத்தி, உறவினர் வருகை, போசன நன்மை. |
| தனுசு | குடும்பக் கவலை, உடல் நலக்குறைவு, வேலைச்சுமை, முயற்சி தாமதம். |
| மகரம் | புதிய சிந்தை, அதிக பிரயாசை, முயற்சி தாமதம், மனச்சஞ்சலம். |
| கும்பம் | கூட்டு முயற்சி, பெரியோர் ஆதரவு, போசன நன்மை, கீர்த்தி. |
| மீனம் | பண விரயம், எடுத்த காரியம் தாமதமாகும், விவாதம், தாழ்ந்த சுபாவம். |

பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.

- வளவன்

## நல்லை ஆலயச் சூழலில்...

நல்லூர் முருகன் ஆலய வருடாந்த உற்சவத்தை முன்னிட்டு நல்லூர் மேற்குவீதி ஸ்ரீ முத்து விநாயகர் ஆலய மண்டப அரங்கில் நடைபெறும் "கந்த புராணம்" தொடர் இசைச் சொற்பொழிவில் இன்று மாலை 6.00 மணிக்கு கான கதா வாரிதி பிரம்ம ஸ்ரீ சிவ.வை.நித்தியானந்த சர்ம "வேலவன்" என்ற பொருளில் இசைச் சொற்பொழிவாற்றவுள்ளார். (து-9)

## சுனாமியால் பாதிக்கப்பட்ட வடமராட்சி மீனவர்களுக்கு மெதடிஸ்த திருச்சபை உதவி

இலங்கை மெதடிஸ்த திருச்சபை சுனாமியால் பாதிக்கப்பட்ட மீனவர்களின் வாழ்க்கையை வளம்படுத்துவதற்கான நடவடிக்கைத்திட்டத்தின் கீழ் மீனவர்களுக்கு படகுகள், வலை உபகரணங்களை வழங்கியுள்ளது.

ஜேர்மன் டோமண்ட் தேவாலயத்தின் அனுசரணையுடன் பொலிகண்டி மேற்கில் உள்ள 7 மீனவ குடும்பங்களுக்கு 30இலட்சம் ரூபா பெறுமதியான படகுகள் இயந்திரங்கள் வலை உபகரணங்களை வழங்கியுள்ளது. இலங்கை மெதடிஸ்த திருச்சபைத் தலைவர் வண.நோயல் பெர்ணாண்டோ அடிகளார் இவ் உபகரணங்களை கையளித்தார். வைபவம் கட்டைவேலி செகர முதல்வர் அருட்திரு.டி. அழகராசா அடிகளார் தலைமையில் நடைபெற்றது பருத்தித்துறை குரு மனைப் போதகர் அருட்திரு எஸ்.சதீஸ் அடிகளாரும் இதில் கலந்துகொண்டார்.

பொலிகண்டி கிழக்கில் யாழ்.கிறிஸ்தவ ஒன்றியத்தின் அனுசரணையுடன் 20 மீனவ குடும்பங்களுக்கு சுமார் 7 இலட்சம் ரூபா பெறுமதியான படகுகள், வலை உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன. அருட்.திரு.டி.அழகராசா அடிகளார் போதகர் எஸ்.சதீஸ் அடிகளார், யாழ்.கிறிஸ்தவ ஒன்றிய உறுப்பினர்கள் இவ் உபகரணங்களை மீனவர்களுக்கு கையளித்தனர்.

பலாலியிலிருந்து இடம்பெயர்ந்து பருத்தித்துறைப் பிரதேசத்தில் தஞ்சமடைந்து பாதிக்கப்பட்ட 61 குடும்பங்களுக்கு சுமார் 25 இலட்சம் ரூபா பெறுமதியான படகுகள், மீன்பிடி உபகரணங்களை கங்கேரியன் இன்ரர்சேச் உதவியுடன் வழங்கியுள்ளது. மெதடிஸ்த திருச்சபையின் பருத்தித்துறை சேகர முதல்வர் அருட்திரு.டி.அழகராசா அடிகளார் தலைமையில் பருத்தித்துறை மெதடிஸ்த குருமனைப் போதகர் அருட்திரு எஸ்.சதீஸ் அடிகளாரால் கையளிக்கப்பட்டன.

பருத்தித்துறை தும்பளையில் இயங்கும் மெதடிஸ்த திருச்சபையின் மகளிர்சங்கங்களின் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் 65க்கு டயகோணி நிறுவனத்தின் உதவியினால் சுமார் 13 இலட்சம் ரூபா பெறுமதியான மீன்பிடி உகரணங்களையும் வழங்கியுள்ளது.

கரவெட்டி மத்தொனிக் கிராமத்திலுள்ள மீனவர்களின் வாழ்க்கையை வளம்படுத்துமுகமாக 61குடும்பங்களுக்கு 6 இலட்சம் ரூபா பெறுமதியான வீச்சு வலைகளையும் வழங்கியுள்ளது. இலங்கை மெதடிஸ்த திருச்சபை தெரிவுசெய்யப்பட்ட சுனாமியால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்குத் தற்காலிக வீடுகளையும் அமைத்துக்கொடுத்துள்ளது. (அ-52)

## சந்தனக் கடத்தல் வீரப்பனின் வாழ்வும் வதமும்



மேல் நாட்டு "றொபின் கூட்"க்கு நிகராகப் பேசப்பட்டவன் தமிழ் நாட்டு வீரப்பன்.

தனியாளாக நின்று முப்பதாண்டு காலமாக மூன்று மாநிலங்களை அதிர வைத்துக் கொண்டிருந்தவன். அவனால் கடத்தப்பட்டவர்கள் பலர். இக் கடத்தல்கள் தொடர்பாகக் கைமாறிய பணம் கோடிக் கணக்கில் .

கோடிக்கணக்கான இப் பணத்திற்கு என்ன நடந்தது?தனியாளாக சந்தன மரங்களையும், யானைத் தந்தங்களையும் இவனால் கடத்தியிருக்க முடியுமா? இவனுக்குப் பின்னணியில் நின்று கடத்தல் நாடகமாடிய பெரும்புள்ளிகள் யார்?

இவனைப் பிடிக்க மறைந்து நின்ற காவல்துறையினர் இவனைக் கைது செய்யாமல் சுட்டுக் கொன்றதன் மர்மம் என்ன?

நீதி விசாரணை நடைபெற்றால் சிக்கக்கூடிய பெரும் புள்ளிகளைக் காப்பாற்றுவதற்காகவே இவன் வாயைத் திறக்கக் கூடச் சந்தர்ப்பம் கொடுக்காமல் சுட்டுக் கொல்லப்பட்டானா?

கடத்தல்காரன் எனப் பெயர் பெற்ற இவனால் 20 ஆண்டு காலத்திற்கு மேலாக அரசியல் செல்வாக்குடன் கோலோச்ச முடிந்தது எப்படி?

மர்மங்கள் விளங்க "சந்தனக் கடத்தல் வீரப்பனன் வாழ்வும் வதமும் " என்னும் கட்டுரைத் தொடரை நாளை வலம்புரியில் எதிர்பாருங்கள் (ஆ-ர்)

ஜனாதிபதிக்கு தெரியாமல்

# மஹிந்த-ஜே.வி.பி இரகசிய பேச்சுவார்த்தை பிரதி அமைச்சரால் அம்பலத்துக்கு வந்தது

(கொழும்பு)

அரசாங்கக் கட்சிக்குள் பாரிய முரண்பாட்டு நிலை ஒன்று ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் கொலைக்கு 48 மணித்தியாலயங்களுக்கு முன்னர் இடம்பெற்றதாகக் கூறப்படும் ஜே.வி.பியினருக்கும் பிரதமர் தலைமையிலான குழுவினருக்கும் இடையிலான பேச்சுவார்த்தை ஜனாதிபதிக்குத் தெரியாமல் நடாத்தப்பட்டமையே இதற்கான காரணம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இப்பேச்சுவார்த்தை பாராளுமன்ற அமர்வு இடம்பெற்றுக் கொண்டிருந்த வேளையில் நடைபெற்றதாக சிங்கள ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

குறித்த பேச்சுவார்த்தையின் போது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளரான மஹிந்த ராஜபக்ஷவிற்கு ஆதரவளிக்க ஜே.வி.பி. இணங்கியுள்ளது.

இதற்கு ஈடாக பிரதமர் மஹிந்த ஜனாதிபதியாக நியமிக்கப்பட்டவுடன் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் செயது கொள்ளப்பட்ட பொதுக் கட்டமைப்பு ஒப்பந்தத்தினை இரத்துச் செய்ய ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினர் இணக்கம் வெளியிட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் சிறுபான்மையினரின் வாக்குகளினை வட தென்னிலங்கை சிங்கள வாக்குகளையே பாரியளவில் எதிர்பார்க்க முடியும் எனற கருததும் இச்சந்திப்பின் போது விவாதிக்கப்பட்டுள்ளது.

இச சந்திப்பு முடிவடைந்தமையை அடுத்து பொதுக்கட்டமைப்புத் தொடர்பான பாராளுமன்ற விவாதத்தின் போது ஜே.வி.பியினரின் நடவடிக்கைகளை ஜனாதிபதி சார்பிலான பிரதியமைச்சர்கள் சிலா விமர்சனம செய்தனர். இதன் போது இதனைத் தடுக் கும் வகையில் செயற்பட்ட பிரதியமைச்சர் ஒருவர் ஜனாதிபதிக் குத தெரியாமல் தாம் ஜே.வி.பியுடன் மேற்கொண்ட பேச்சுவார்த்தைகள் தொடர்பான முழு வபரங்களையும் ஜே.வி.பியை பாராளுமன்றத்தில் விமர்சித்த பிரதியமைச்சர்களிடம் வெளிபடுத்தியுள்ளார்.

ஜே.வி.பியினை விமர்சித்தால் பிரதமரை ஜனாதிபதித்தேர்தலில் வெற்றி பெறச் செய்யமுடியாது போய்விடும் எனவும் குறித்த பிரதியமைச்சர் தெரிவிததார். இவ்வாறான நிலையிலேயே ஆளும் கட்சிக்குள் முரண்பாடு நிலைகள் ஏற்பட்டு அது பாரியளவில வளர்ந்துள்ளதாக அச்சிங்கள ஊடகம வெளியிட்ட செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (து-4)



37 வருட அரச சேவையில் இருந்து இளைப்பாறிச்செல்லும் யாழ். கால்நடை அத்தியட்சகர் வைத்திய கலாநிதி எம்.தங்கராசாவின் சேவை நலன் பாராட்டு விழாவிலே யாழ். மாவட் டகால் நடை உற்பத்தி சுகாதார உதவிப்பணிப்பாளர் வைத்திய கலாநிதி எஸ்.இராமநாதன் அன்பளிப்பு வழங்குவதையும் வைத்திய கலாநிதி பீ. தங்கராசா அருகில் இருப்பதையும் காணலாம். (படம்: பரு. நிருபர்)

# 'ஒப்பரேசன் கிளீன் ஒப்' நடவடிக்கையில் 3000க்கும் அதிகமானோர் கைது

(கொழும்பு)

சென்ற ஜூலை முதலாம் திகதி ஆரம்பிக்கப்பட்ட "ஒப்ரேசன் கிளீன் ஒப்" நடவடிக்கைகயில் இதுவரை மூவாயிரத்திற்கும் அதிகமானோர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது.

மூத்த பொலிஸ் அதிகாரி ஹெக்டர் தர்மசேனவின் பணிப்புரையின் பேரில் மாத்தளை மாவட்டத்தில் உள்ள ஒன்பது பொலிஸ் பிரிவுகளிலும் மேற்கொள்ளப்பட்ட திடீர் தேடுதலின் போதே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

விசாரணைகளின் பின்னர் குற்றவாளிகள் அல்லர் என இனங் காணப்படுவோர் விடுவிக்கப்பட்டு வருவதாகவும் ஏனையோரை நீதி மன்றத்தில் ஆஜர் செய்ய நடவடிக்கை எடுககப்பட்டு வருதாகவும் பொலிஸ் அதிகாரி தெரிவித்தார்.

இத்தேடுதலின் போது தேவைக்கு உதவியவை என இனங்காணப்பட்ட 1500 க்கும் அதிகமான வாகனங்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளன. (து-4)

# முன்னோடி வேலைத் திட்டம்

(கொழும்பு)

மாணவர்களின் பண்பாட்டு அபிவிருத்தியை மேம்படுத்தும் பொருட்டு தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளில் அடுத்த வருடம் தொடக்கம் பண்பு.சார் மேம்பாட்டு முன்னோடி வேலைத்திட்டம் ஒன்றை ஆரம்பிக்க கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

ஒரு மாகாணத்திற்கு ஒரு வலயம் என்ற அடிப்படையில் எட்டு வலயங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு இத் திட்டம் அமுல் செய்யப்படும்.

எட்டு கல்வி வலயங்களிலுள்ள தேசிய பாடசாலைகள்,மத்திய மகா வித்தியாலயங்கள் நவோதய பாடசாலைகள் என்பன இந்த புதிய அபிவிருத்தித்திட்டத்தின் கீழ் வருகின்றன.

இவற்றின் பாடசாலை அபி விருத்திக்குழு, பாடசாலை முகாமைத்துவ அணி ஆகிய இரு அமைப்புக்களும் உடனடியாக ஏற்படுத்தப்பட வேண்டுமென கல்வியமைச்சின் செயலாளர் வேண்டுகோள் விடுத்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (து-7)

# மீன்பிடித்துறையை மீளக்கட்டியெழுப்ப ரூபா 60 கோடி செலவில் அபி.திட்டங்கள்

(கொழும்பு)

சுனாமி அனர்த்தம் காரணமாக முற்றாகப் பாதிக்கப்பட்ட மீன்பிடித் துறையிலும்,அதனை நம்பி வாழும் மீனவ சமூகத்தின் வாழ்க்கையையும் மீளக் கட்டியெழுப்புவதற்காக 60 கோடி ரூபா செலவில் பாரிய அபிவிருத்தித்திட்டங்களை முன்னெடுக்க உலக உணவு விவசாய ஸ்தாபனம் முன் வந்துள்ளது.

அம்பாந்தோட்டை, மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மீன் பிடித் தொழிலை மீளமைப்பதற்கு 13 மாதிரி மீன் பிடி சமுதாயக் கிராமங்கள் அமைக்கப்படவுள்ளன.

இக்கிரமங்களில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மீனவர்கள் குடியமர்த்தப்படவுள்ளதுடன் அவர்களுக்கான மீன் பிடி உபகரணங்கள்,சுயதொழில் வசதிகள்,மீன் பிடி வள்ளங்கள் என்பனவும் வழங்கப்படவுள்ளதாக உலக உணவு விவசாய ஸ்தாபனத்தின் சுனாமி அவசர புனர் வாழ்வு இணைப்பாளர் தெரிவித்துள்ளார்.

உலக உணவு விவசாய ஸ்தாபனத்தினால் நடைமுறைப்படுத்த படவுள்ள இத் திட்டத்திற்கு தாய்வான், இந்தியா, இத்தாலி ஆகிய நாடுகளும் மீன் பிடி அமைச்சு,தேசிய கடல் வளம் அபிவிருத்தி அதிகார சபை என்பனவும் பங்களிப்புச் செய்ய முன் வந்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ர-7)

# கொழும்பு பல்கலைக்கழகத்தை திறப்பதில் தொடரும் இழுபறி

(கொழும்பு)

கொழும்பு பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற மாணவர் குழுக்களுக்கிடையிலான மோதல் தொடர்பான சந்தேக நபர்கள் இதுவரை அடையாளம் காணப்படவில்லை எனவும் இதன் காரணமாக இந்த மோதல் சம்பவம் தொடர்பாக விசாரணைகளைத் துரிதப்படுத்துமாறு சம்பந்தப்பட்ட தரப்பினர்களுக்கு ஆலோசனை வழங்கியுள்ளதாகவும் கொழும்பு பல்கலைக்கழகத்தின் உப வேந்தர் பேராசிரியர் கெட்டியாரச்சி தெரிவித்துள்ளார்.

இந்த சம்பவத்துடன் தொடர்புடைய மாணவர்களுக்குத் தண்டனை வழங்காமல் பல்கலைக் கழகத்தைத் திறக்கமுடியாதுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும் பல்கலைக் கழகத்தை விரைவில் திறப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கு அமைவாக கலைப் பீடாதிபதி உட்பட விரிவுரையாளர்கள் சபையுடன் அடுத்த வாரம் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இரண்டு மாணவ குழுக்களுக்கிடையே அண்மையில் இடம்பெற்ற மோதல்காரணமாக கொழும்பு பல்கலைக்கழகத்தில் கலைப்பீடம், நீதி மற்றும் முகாமைத்துவபீடம் என்பன தற்காலிகமாக மூடப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.


பல்கலைக்கழகம் மீளத் திறக்கப்பட்டதும் இடை நிறுத்தப்பட்டுள்ள பரீட்சைகள் மீண்டும் ஆரம்பிக்கப்படும் என்றும் உபவேந்தர் மேலும் தெரிவித்துள்ளார். (து-9)

# பீடாரோகணம்

நல்லை திருஞான சம்பந்தர் ஆதினத்தின் 39ஆவது பீடாரோகண விழா நாளை மறுதினம் வெள் ளிக்கிழமை நடைபெறவுள்ளது. காலை 10மணிக்கு குருமூர்த்த ஆலயத்தில் எழுந்தருளியிருக்கும் பாலாம்பிகை சமேத வைத்திய நாதசுவாமிகளுக்கு அபிஷேகம் பூஜை வழிபாட்டைத் தொடர்ந்து பா அபிஷேகம், குருபூசை, பட்டண பிரவேசம், மகேஸ்வரபூசை என்பன நடை பெறவுள்ளன. (அ)

# நல்லூரான் திருவடிக்கு

## இன்று பதினைந்தாம் திருவிழா



## கூவு குயிலே கூவு

நற்றமிழர் தலைவன் வருகிறான்
நல்லை வீதியிலே வருகிறான் கூவு குயிலே கூவு
உற்ற துயர் தீர்த்திட வருகிறான்
உரிமைதனை கொண்டு வருகிறான் கூவு குயிலே கூவு
பெற்ற தெய்வம் அவனல்லவா
பிள்ளைகளை காண வருகிறான் கூவு குயிலே கூவு
வெற்றிகளை தேடித் தருகிறான்
வேலன் வருகிறான் கூவு குயிலே கூவு

*மதுரகவி*

## வணங்கிடுவாய் மனிதா

வணங்கிடுவாய் மனிதா- தினமுமே
மனமுருகிப்பாடி நல்லூரின் நாயகனை (வண)
கல்லினுட் தேரைக்கும் கருப்பை யுயிர்க்கும்
நல்லுணவே தந்து காக்கும் எம் குகனை (வண)
பேரான நல்லூரில் வீதிவலம்வரும்போது
நாராயணன் மருகன் தாள்களைப் பரவியே
தீராத தீவினைகளைத் திட்டமாகவே அழித்து
மாறாத நோய்களும் முழுதுமாய்ச் சுகம் பெற
(வண)

*கவிமணி கந்த முருகேசதாசனார்*

## நித்தமுன் விழாவிலேன் இத்தனை பெருங்கூட்டம்?

குளிர்களி குடித்திட கூடுவர் ஒருபால்
பழிகளைத் தீரென பணிபவர் ஒருபால்
பொழுதினைப் போக்கிட வருபவர் ஒருபால்
அழுதழுதுன்னிடம் அரற்றுவார் ஒருபால்
விருப்புடன் பஜனைகள் பாடுவார் ஒருபால்
திருப்புகழ் திருமுறை ஓதுவார் ஒருபால்
அவரவர் அவா வினைத் தீர்ப்பதாலன்றோ
அழகாவுன் நல்லையில் ஆட்பெருங் கூட்டம்

*கவிமணி அன்னைதாசன்*

## நல்லைசோதி! சீர்பெறவே வாவாகுருவே!

மயில்வேல் ஒளிர்திரு வெயில்வேலா- நல்லை சோதி
மேதினியில் ஒளிர்தரு மாநகரானே
அயில் வேல் சங்காரனே சூராதிசூரா- கார்தீகேயா
அடைக்கல மானபோதில் அருள்வீரா
பயில்வேல் நடனமிடு நல்லை சோலை-வாகையனே
பார்சுற்று பழனி வேல் ஐக்கியனே
துயில் கொள் உயிர்கள் அறிவுஞானி-சுதந்திரா
தரணிவேலா சீர்பெறவே வாவாகுருவே

*நல்லூர் சிவமுருகன் தமிழ்மகன் நந்தகுமார்*

## நல்லோர் மனத்துத் துதிப்பொருள்

கடப்ப மாலை யது சூடிக்
காண்பார் கண்கள் களிப்பாக
மடப்ப மங்கை மருங்காக
மான வேலு முடனாக
இடப மூரும் மகனார் தாம்
இன்புற் றுயிர்கட் கருள் செய்ய
நடப்பர் நல்லூர் விழா வீதி
நல்லோர் மனத்துத் துதிப்பொருளே

*சிவ. சண்முகவடிவேல்*

## போரளிக்க வருவாயே

முருகா என்றுன் திருநாமம்
ஒருகால் உரைத்தால் உடல் சிலிர்க்கும்
நிருதர் துயரம் தீர்த்திடவே
அவுணர் குலத்தை அழித்தவனே
போற்றித் துதிக்கும் அடியார்க்கும்
பேற்றைக் கொடுக்கும் பெருமானே
போற்றி போற்றி நின்னடிகள்
பெருவேற் பெருமான் தாள் போற்றி

*K.யாழினி*

# இன்று ஒரு தகவல்

## அவமானம்

வாழ்க்கையில் ஒரு சில சந்தர்ப்பங்களில் நாம் சில அவமானங்களைச் சந்தித்தே தீரவேண்டியுள்ளது. என்ன செய்வது? காலம அப்படி அவமானப்படுபவர்கள் உடனே அடங்கிப்போய் விடுவது தான் உலக வழக்கம். அவமானப்படடால் உடனே சீறி எழுபவர்களும் உண்டு. ஆனால் அதையே ஒரு சவாலாகக் எடுத்துக் கொண்டு முன்னேறுபவர்களும் உண்டு.

இன்று மனோதத்துவ நிபுணர்கள் எல்லாம் என்ன சொல்கின்றனர் தெரியுமா? அவமானப்பட்டுவிட்டால் உடனே அடங்கிப் போய் விடககூடாதாம். அதையே ஒரு சவாலாக எடுத்துக்கொண்டு மனதில் ஒரு வைராக்கியத்தோடு முயற்சி செய்தால் வாழ்க்கையில் எல்லோரும் முன்னேறலாமாம். அவமானம் என்பதை நாம் வைராக்கியமாக மாற்றிக்கொள்ளவேண்டும். அது தான் வெற்றிக்கு வழி.

"இராமர் இந்தப் பூமியில் பிறந்ததே ஒரு வைராக்கியத்தினால்த தான் சார்" என்றார் ஒருவர். எப்படி? என்று கேட்டேன் அவர் சொன்னார். "தசரதருக்கு இராமர் குழந்தையாக வந்து பிறக்க வேண்டும. அப்போதுதான் இங்குள்ள கஷ்டங்கள் எல்லாம் நீங்கும். என்று சர்வலோகமும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது. ஆனால் அவர் எப்போது வந்து பிறப்பார் என்று யாருக்கும் தெரியவில்லை. அந்தக்காரியம் விரைவில் நடக்கவேண்டுமே! அதற்கு என்ன செய்வது?

தசரதரைத் தேடி ஒருநாள் நாரதர் வந்தார்."தசரதா! உனக்கு ஒரு சேதி தெரியுமா?" என்று கேட்டார். "என்ன விஷயம்? என்று கேட்டார். தசரதர் "தசரதா! நீ அடிக்கடி உனது தேரில் ஏறிக்கொண்டு தேவலோகத்திற்குப்போய் வருகிறாய் தேவலோகத்திலும் உன்னை நல்ல விதமாகத்தான் வரவேற்கிறார்களா. தேவேந்திரன் உன்னை பிரியமாக அழைத்துக்கொண்டு போய் தனது அரியாசனத்தில் தனக்குப் பக்கத்திலேயே உட்கார வைக்கிறான். நீயும் சந்தோஷமாக உட்கார்ந்து பேசிவிட்டு வருகிறாய் ஆனால் நீ இங்கே வந்த பின்பு அங்கே என்ன நடக்கிறது என்று உனக்குத் தெரியுமா?" என்றார் நாரதர்.

"என்ன நடக்கிறது? எனக்கு ஒன்றும் தெரியவில்லையே!" என்றார் தசரதர். நாரதர் அருகில் வந்தார். மெதுவாக அவரது காதோடு காதாக சொனனார் நீ அங்கே தேவேந்திரனிடம் உட்காந்து பேசிவிட்டு வந்த பின்பு நீ அங்கே உட்கார்ந்திருந்த அரியர்சனத்தை தண்ணீர் ஊற்றி கழுவி சுத்தப்படுத்துகிறார்கள். நீ என்ன அந்தளவுக்கு சுத்தம் இல்லாத ஆளா? என்றார். தசரதருக்கு இது மிகவும் அவமானமாகிவிட்டது. "அப்படியா செய்தார்கள்?" என்றார் . "ஆமாம்! வேண்டுமென்றால் நீ நான் கூறுவது உண்மையா? இல்லையா என்று சோதித்துப் பார்த்துக்கொள என்றார் நாரதர்.

உடனே தசரதர் இதற்காகவே புறப்பட்டு தேவலோகம் சென்றார். அங்கே வழக்கம் போலவே இவரைக் கூப்பிட்டு உட்கார வைத்து பேசிக்கொண்டிருந்தார். தேவேந்திரன் கொஞ்ச நேரம் பேசிக்கொண்டிருந்துவிட்டு "சரி... நான் கிளம்புகிறேன் என்று புறப்பட்டார். தசரதர் அவனும் வாசல்வரை வந்து வழியனுப்பி வைத்து விட்டு உள்ளே சென்றான். தசரதர் வெளியே கொஞ்ச நேரம் மறைந்திருந்துவிட்டு மெதுவாக உள்ளே எட்டிப்பார்த்தார். என்ன நடக்கிறது என்று! நாரதர் சொன்னது சரிதான்! தசரதர் உட்கார்ந்திருந்த ஆசனத்தை அங்கே இரண்டு தேவர்கள் சுத்தப்படுத்திக்கொண்டிருந்தனர்.

இதைத் தாங்கிக்கொள்ள முடியவில்லை. அவருக்கு மிகவும் அவமானமாகி விட்டது. நேராக தேவேந்திரனிடம் போனார். நான உட்கார்ந்திருந்த இருக்கையை சுத்தம் செய்கிறாயே... நான் என்ன அந்தளவுக்குப் பாவியா என்று கேட்டார். மிகவும் கோபமாக "தசரதரரே! மனிதனுக்கு மூன்று கடன்கள் உண்டு. தேவகடன், ரிஷிகடன், பித்ரு இதைத்தீர்க்காதவன் பாவியாகிறான். இதில் மகனைப் பெறுவதால் தான் பித்ருகடன் தீரும் உனக்கு மகனில்லை அதனால் நீ பாவியாகிறாய். பாவி உடகார்ந்திருந்த இடம் என்பதனால் அதைச் சுத்தம் செய்யவேண்டியது எங்கள் கடமை என றான் தேவேந்திரன்.

இந்த இடத்தில் தசரதருக்கு ஏற்பட்ட அவமானம் வைராக்கியமாக மாறியது "தேவேந்திரரே கேட்டுக்கொள்ளுங்கள்! ஒரு மகனைப்பெற்ற பிறகுதான் இந்த சபையில் மறுபடியும் கால் வைப்பேன் என்று கூறிவிட்டுப் போய்விட்டார் போய்புத்திர காமேஸ்ரியாகம் செய்தார். புததிரர்கள் பிறந்தார்கள். இந்தக் கதையில் உள்ள கருத்து என்னவென்றால் தேவேந்திரன் தசரதரை அப்படி அவமானப் படுத்தாவிட்டால் அவருக்கு இப்படி ஒரு வைராக்கியம் பிறந் திருக்குமா? யோசித்துப் பாருங்கள். நமக்கு ஏற்படும் சில அவமானங்களையும் வைராக்கியமாக மாற்றிக்கொள்வோம். வாழ்க்கையில முன்னேறுவோம். நமது ஆட்கள் சிலபேர் அவமானத்தை வைராக்கியமாக மாற்றிக்கொள்வது எப்படித் தெரியுமா?

என்னிடம் ஒரு சிறுவன் சொன்னான் எங்கள் அப்பா என்னை எல்லோருக்கும் முன்னால்வைத்துத் திட்டிவிட்டார். பொறுப்பில்லாமல் ஊர் சுற்றுகிறேன் என்று சொல்லி அவமானப்படுத்தி விட்டார். இனிமேல் நீ என் முகத்திலேயே விழிக்காதே! போ! என்று வேறு சொல்லிவிட்டார். எனக்கு ரோஷம் வந்துவிட்டது. அந்த அவமானத்தை வைராக்கியமாக மாற்றிக்கொண்டேன். அன்றிலிருந்து அவர் முகத்திலேயே விழிப்பதில்லை என்றான். அப்படியா? என்றேன் "ஆமாம்! அவர் வீட்டில் இல்லாத நேரம் பார்தது உள்ளே சமையல்கட்டுககுப்போய் சாப்பிட்டுவிட்டு நைசாக வெளியே வந்து விடுவேன்'' என்றான்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## 1990 ஆம் ஆண்டு தீவகத்தில் காணாமல் போனோர் தொடர்பாக மனித உரிமைச் செயலகம் விசாரணை

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவு,அல்லைப்பிட்டி,மண்கும்பான் ஆகிய பகுதிகளில் 1990ஆம் ஆண்டு படையினரால் கைது செய்யப்பட்டு காணாமல் போனோர் தொடர்பாக கிளிநொச்சியில் அமைந்துள்ள வடக்கு-கிழக்கு மனித உரிமைகள் செயலகம் விசாரணை ஒன்றினை ஆரம்பித்துள்ளது.

இவ் வசாரணையில் காணாமல் போனவர்களுடைய பெற்றோர்கள், உறவினர்கள் தமது வாக்குமூலத்தை அளித்துள்ளனர்.

1990ஆம் ஆண்டு 8ஆம் மாதம் 25ஆம் திகதி 6ஆயிரம பேர் அல்லைப்பிட்டியில் உள்ள பிலிப்பினேரியர் கோயிலில் இராணுவத்தினர் கட்டளைக்கு அமைய தஞ்மடைந்திருந்தனர்.அப்போது இராணுவத்தினர் இக்கோயிலைச் சுற்றிவளைத்தனர். கோயிலில் தஞ்சமடைந்திருந்த ஆண்களையும் பெண்களையும் வெவ்வேறாகப் பிரித்தனர். பின்னர் ஆண்களை வயதுக்கேற்ப தரம்பிரித்தனர். இவர்களில் 500ற்கும் மேற்பட்டோரை கயிற்றால் கட்டி பிடித்துச் சென்றனர்.

1990 ஆம்ஆண்டு 9ஆம் மாதம் 23ஆம் திகதி மணகுமபானில் பாடசாலையிலும் கோயல்களிலும் தஞ்சமடைந்திருந்தோரை இராணுவத்தினர் பிடித்துச் சென்றனர்.

இராணுவத்தினர் பிடித்துச்சென்றோரின் ஏறக்குறைய 70 பேர் இதுவரை வீடு திரும்பவில்லை.மூன்று கிராமங்களிலும் காணாமல் போனவர்களின் குடும்பங்கள் பெரும் அவலங்களைச சுமந்தவண்ணம் உள்ளனா. வடக்கு-கிழக்கு மனித உரிமைகள செயலகம் காணாமல் போனோரின் 38குடும்பங்களைச் சந்தித்து விசாரணை நடாத்தியுள்ளது. 7 குடும்பங்களில் இருந்து இருவரும் ஒரு குடும்பத்திலிருந்து மூவரும் காணாமல் போய்யுள்ளனர் என இவ் விசாரணைகளில் இருந்து தகவல்கள் பெறப்பட்டுள்ளன.

மண்டைதீவில் உள்ள பல கிணறுகளில் 100-200 வரையான மனித எலும்புக்கூடுகள் இருக்கலாம் என அஞ்சப்படுகிறது.

இக்கிணறுகள் தற்போது இராணுவத்தினர் உயர் பாதுகாப்பு வலயத்திற்குள் அமைந்துள்ளன. இக்கிணறுகள் சிலவற்றுள் விடுதலைப் புலிகள் அமைப்பில் இருந்தோரின் எலும்புக்கூடுகள் உள்ளன. மண்டைதீவுப்பாடசாலைக்குப் பின்னுள்ள கிணறுகளில் பொதுமக்களின் எலும்புக்கூடுகள் உள்ளன. இலங்கைச் செஞ்சிலுவைச்சங்கமும் யாழ் பல் கலைக் கழகமும் சேர்நது 1991 ஆம் ஆண்டில் மண்டைதீவு பாடசாலைக்கு பின்னுள்ள கிணறுகளில் இருந்து 55 எலும்புக்கூடுகளை எடுத்திருந்தனர்

தற்போதும் இப்பகுதி கிணறுகளில் மனித எலும்புக்கூடுகள் பலவுள்ளன என இப்பகுதி மக்கள் தெரிவிக் கின றனர். வடக்கு-கிழக்கு மனித உரிமைச்செயலகம் விசாரணையைப பூரணப்படுத்துவதற்கு இச் சம்வத்தில் தொடர்புடையவர்களுடன் தொடர்புகொள்ளவிரும்புகிறது. (அ-4)

## கைக்குண்டு வீச்சில் பொதுமகன் காயம்

(திருகோணமலை)

திருகோணமலையின் 3ஆம் கட்டச்சந்தியை அண்மித்த பகுதியில் காவலுக்கு நின்றிருந்த படையினர் மீது நேற்றுமுன்தினமிரவு மேற்கொள்ளப்பட்ட கைக் குண்டுத் தாக்குதலில் அப்பகுதியால் சென்றுகொண்டிருந்த பொதுமகன் ஒருவர் காயமடைந்தார். காயமடைந்த அவர் சிகிச்சைக்கென திருகோணமலை அரசினர் பொது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இக் குண்டு வீச்சு சம்பவத்தினைத தொடர்ந்து அப் பகுதிக்கான வீதிப் போக்குவரத்து தற்காலிகமாக தடை செய்யப்பட்டதுடன், அப் பகுதியால் சென்றவாகள் தீவிர விசாரணைக்குட்படுத்தப்பட்டனர். (ச-4)

## சட்டவிரோத இரத்தினக் கல் அகழ்வில் 38 பேர் கைது

(இரத்தினபுரி)

சட்டவிரோத இரத்தினக்கல் அகழ்வில் ஈடுபட்டிருந்த 38 பேரை இரத்தினபுரி விசேட பொலிஸ் படையணி கைது செய்துள்ளது.

24 மணி நேரத்துக்குள் இவர்கள் இரத்தினபுரி மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் அநேகர் கொடக்கவெல,-போயத் எல்ல பகுதிகளைச் சேர்ந்தவர்ளெனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இவர்கள் இரத்தினபுரி மஜிஸ்திரேட் நீதிவான் முன்னிலையில் ஆஜர் செய்யப்படவுள்ளனர்.

இயற்கை வளங்கள் கண்டபடி அழிக்கப்படுவதாலும் சுற்றாடல் மிக மோசமாக மாசுபடுத்தப்படுவதாலும் இவ்விடயத்தில் தொடர்ந்து தேடுதல்கள் நடத்தப்பட்டு சட்டத்தை மீறுவோர் கைது செய்யப்படுவாகளென பொலிஸார் தெரிவித்தனர்.

இரத்தினபுரி மாவட்டத்தில் பரவலாக சட்ட விரோத இரத்தினக்கல் அகழ்வு இடம்பெற்று வருகின்ற போதிலும் பொலிஸார் இவ்விடயத்தில் அக்கறை காட்டுவதில்லை எனப் பரவலான குற்றச்சாட்டு நிலவுகிறது.

குறிப்பாக பெருந்தோட்டப் பகுதிகளில் தொழிலாளர் குடியிருப்புக்கள் மற்றும் தமிழ்ப் பாடசாலைகள இரத்தினக்கல் அகழ்வினால் பாதிக்கப்பட்டுள்ளன.

விசேட பொலிஸார் தற்போது மேற்கொள்ளும் நடவடிக்கையை பொதுமக்கள் பாராட்டி வருகின்றனர். (து-9)

## சேக்கிழார் விழா போட்டி

(யாழ்ப்பாணம்)

உலக சேக்கிழார் விழா மாணவர்களுக்கான இறுதிப் போட்டிகள் இன்று காலை 8.30க்கு நாவலர் மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

சகல போட்டிகளிலும் 1,2ஆம் இடம்பெற்றவர்கள் இறுதிப்போட்டியில் பங்குபற்றலாம் என இந்து சமய அலுவல்கள் யாழ். மாவட்ட இணைப்பாளர் கே. நாகராசா தெரிவித்துள்ளார். (அ)

## சந்திப்பு

(கொழும்பு)

கொழும்பிலுள்ள பிரித்தானியத் தூதுவர் ஸ்ரீபன் இவானை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமனற உறுப்பினர்கள் இன்று சந்தித்து கலந்துரையாடவுள்ளனர்.

பொதுக் கட்மைப்பு ஏற்படுத்தப்படாமையினால் வடக்கு-கிழக்கு பகுதிகளில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அவசர மனிதாபிமான பணிகளை வழங்க முடியாமல் இருக்கின்றமை யுத்த நிறுத்த உடன்படிக்கை மீறப்படுகின்ற சம்பவங்கள் மற்றும் தென்பகுதி அரசியல் நிலை பற்றி தூதுவருடன் கலந்துரையாட இருப்பதாக கூட்டமைப்பு தெரிவிததுள்ளது.

கூடடமைப்பின சிரேஷ்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் தலைமையிலான நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்தச் சந்திப்பில் கலந்து கொள்ள இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.(அ2)

## சிறைச்சாலைகளுக்குப் பயிற்றப்பட்ட நலன்புரி அதிகாரிகள் நியமனம்

(கொழும்பு)

சிறைக் கைதிகளுக்கான நலன்புரி நடவடிக்கைகள் மீளமைக்கப்பட இருப்பதாக நீதிச்சேவைகள் அமைச்சர் டபிள்யு. டி.ஜே. செனவிரத்தன தெரிவித்துள்ளார்.

இத் தகைய திட்டத்தின் மூலம் கைதிகளுக்குப் புனர்வாழ்வு அளிக்க முடியும் என்று அரசாங்கம் நம்புவதாக அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் இருந்து பெற்றுக்கொள்ளப்படும் தரங்களுக்கேற்ப இந்தத் திட்டம் மாற்றியமைக்கப்படும்.

இதன் முதற்கட்ட நடவடிக்கையாக ஒவ்வொரு சிறைச்சாலைக்கும் பயிற்றப்பட்ட நலன்புரி அதிகாரி ஒருவரை அனுப்புவதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

இதற்கமைய நாடளாவிய ரீதியில் உள்ள சிறைசசாலைகளில் இது போன்ற 50 பயிற்றப்பட்ட அதிகாரிகள தமது கடமைகளை பொறுப்பேற்றுள்ளனர். (அ-2)

## சர்வதேச புத்தகக் கண்காட்சியில் புத்தகம் வாங்க பாடசாலைகளுக்கு கல்வியமைச்சு நிதி உதவி வழங்கும்

(கொழும்பு)

நாட்டின் தேசிய மற்றும் நவோதயப் பாடசாலைகளின நூலக அபிவிருத்திக்கான நூல்களைக் கொள்வனவு செய்வதற்காக கல்வியமைச்சு ரூபா 10 கோடியை இவ்வாண்டு செலவிடவுள்ளதாக கல்வியமைச்சின் மேலதிக செயலாளர் எஸ்.தில்லைநடராஜா தெரிவித்துள்ளார்.

நாடு முழுவதிலும் உள்ள தேசியப் பாடசாலை களுக்கு தலா ஒரு இலட்சம் ரூபா வீதமும் நவோதயப் பாடசாலைகளுக்கு தலா 5 இலட்சம வீதமும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதற்கான காசோலைகள் வழங்கும் வைபவம் எதிர் வரும 26ஆம் திகதி கல்வியமைச்சில் இடம்பெறவுள்ளதாகத் தெரிவித்த மேலதிக செயலாளர் தமிழ் மூலதேசிய மறறும் நவோதயப் பாடசாலைகளுக்கான காசோலைகள 27ஆம் திகதி வழங்கப்படும் எனவும் கூறியுள்ளார்.

இந்தக் காசோலைகளைப் பயன்படுத்தி தாம் நினைத்தவாறு நூல்களைக் கொள்வனவு செய்ய முடியாது என்றும் பண்டார நாயக்க சர்வதேச ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 10ஆம் திகதி முதல் 18ஆம் திகதி வரை இடம்பெறவிருக்கும் சர்வதேச புத்தகக் கண்காட்சியில் புத்தகங்களைக் குறைந்த விலையில் கொள்வனவு செய்ய முடியும் எனவும் செயலாளர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-2)

## புலிகளை தடை செய்ய நோர்வே ஆட்சேபனை

(கொழும்பு)

ஐரோப்பிய நாடுகளில் விடுதலைப் புலிகளை தடை செய்வதற்கு இலங்கை அரசாங்கம் மேற்கொண்டு வரும முயற்சிகளை நோர்வே அனுசரணையாளர்கள் கடுமையாக ஆட்சேபித்துள்ளனர்.

வெளிவிவகாரத்துறை அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் கொலையை அடுத்து அனைத்து ஐரோப்பிய நாடுகளிலும் விடுதலைப் புலிகளை தடை செய்வதற்கான இராஜதந்திர முன்னெடுப்புக்களை அரசு மேற்கொண்டுவருகின்றது.

ஏறகனவே அச்சுறுத்தலுக்குள்ளாகியிருக்கும் சமாதான முன்னெடுப்புக்கள் விடுதலைப் புலிகள் ஐரோப்பிய நாடுகளில் தடை செய்யப்பட்டால் முற்றாக முறிவடையும் என்று நோர்வே அனுசரணையாளர்கள கருதுகிறார்கள் அதனால் இவ்வாறான முயற்சிகளை கை விடுமாறு அரசாங்கத்தை நோர்வே வலியுறுத்தி வருகின்றது. (து-4)

# உலக ரெனிஸ் தரவரிசையில் முதலிடத்தில் ரஷ்ய வீராங்கனை மரியா ஷரபோவா

உலக ரெனிஸ் தரவரிசையில் மரியா ஷரபோவா முதல் இடத்தைப் பெற்று சாதனை படைத்துள்ளார். கடந்த 2004இல் விம்பிள்



டன் தொடரில் சமபியன் பட்டம வென்று ரெனிஸ் போட்டியில் ரஷ்ய வீராங்கனை மரியா ஷரபோவா தடம் பதித்தார். இதை யடுத்து பல்வேறு சர்வதேச தொடர் களிலும் கோப்பை வென்றுள்ளார்.


தற்போது முதல் முறையாக மரியா ஷரபோவா 4 ஆயிரத்து 452 புள்ளிகளைப் பெற்று நேற்றுமுன்தினம் வெளியிடப்பட் டுள்ள உலக தரவரிசைப் பட்டியலில் முதல் இடம் பிடித்துள்ளார். 18 வயதாகும் இவர் உலக தரவரிசைப் பட்டியலில் முதலிடம பெறும் முதல் ரஷ்ய வீராங்கனை என்ற சாதனையையும் பெற்றுள்ளார்.

இதைவிட, குறைந்த வயதில் முதலிடம் பெறும் ஐந்தாவது வீராங்கனை என்ற பெரு மையையும் பெற்றுள்ளார்.

ரோஜர்ஸ் கோப்பைத் தொடரில் சம்பி யன் பட்டம் வென்றதன் மூலம பெல்ஜியத்தின் கிம் கிளைஸ்டர்ஸ் எட்டாவது இடத்தில இருந்து நான்காவது இடத்திற்கு முன்னே றியுள்ளார்.

இவரிடம் இறுதிப் போட்டியில் தோற்ற சக நாட்டு வீராங்கனையான ஜஸ்டின ஹெனின் 5 ஆவது இடத்திலிருந்து ஏழாவது இடத்திறகு பின் தள்ளப்பட்டுள்ளார்.(அ-19)

# ரோஜர்ஸ் கோப்பை ரெனிஸ் தொடரில் பெல்ஜிய வீராங்கனை கிளைஸ்டர்ஸ் வெற்றி




ரோஜர்ஸ் கோப் பை ரெனிஸ தொட ரில் ஏழாம நிலை வீராங்கனையான கிம் கிளைஸடர்ஸ் சம்பியன் பட்ட ததை வென்றுள் ளார்.

முன்னணி வீராங் கனைகள் பங் கேற்ற ரோஜர்ஸ் கோப்பை ரெனிஸ் தொடர் கனடாவில உள்ள ரொறண்ரோ நகரில் நடைபெற்று வந்தது.

இதன் இறுதிப் போட்டி கடந்த 21 ஆம் திகதி நடைபெற்றது. இதில் பெலஜிய வீராங் கனையான கிம்கிளைஸ்டர்ஸ், சக நாட்டு வீராங்கனையான ஜஸ்டின் ஹெனினை 7-5, 6-1 என்ற நேர் செட் கணக்கில் வென்று கோப்பையை தனதாக்கிக் கொண்டார்.

இதேபோன்று அமெரிக்காவின் சின்



சினாட்டி நகரில் மாஸ்ரர் ரெனிஸ தொடர் நடைபெற் றது. இப்போட்டி யின் இறுதிப் போட் டியில் சுவிஸ்லாந் தின் ரோஜர் பெடரர், அமொிக்காவின் அண்டி ரொடிக் ஆகி யோர் மோதி னார் கள். முழு வேகத் துடன் விளையா டிய ரோஜர் பெடரர் 6-3. 7-5 என்ற செற் கணக்கில் அன் டி ரொடிக்கை வீழ்த்தி சமபியன் பட்டத்தை வெனறார். (அ-19)

# சிம்பாவேக்கு தடைவிதிக்க இங்கிலாந்து வலியுறுத்தல்

சர்வதேச கிரிக்கெட போட்டிகளில் விளை யாட சிம்பாவேக்கு தடைவிதிக்க வேணடும் என்று இங்கிலாந்து வலியுறுத்தியுள் ளது. சிமபாவே அரசு மனித உரிமையை அதிக பட்சமாக மீறி வருகிறது. எனவே சிமபாவே கிரிக்கெட் அணியை ஒதுக்கித் தள்ள வேண்டு மென்று இங்கிலாந்து உயர் அதிகாரி ஒருவர் நேற்றுமுன்தினம் கூறியுள்ளார்.


சிமபாவேயில் உள்ள புறநகர் பகுதிக ளில் மக்கள் குடியிருக்கும் வீடுகளை அந் நாட்டு அரசு இடித்துத் தள்ளுகிறது. இது வரை 7 இலட்சம் வீடுகளை இடித்துள்ளது. இது மிகவும் கண்டனத்திற்குரியது என்றும் இஙகிலாந்து நாட்டு அதிகாரி தெரிவித்தார். ஆனால் சிம்பாவே அரசு இந்தக் குற்றச் சாட்டைத் தொடர்ந்து மறுத்து வருகிறது. ஏழை மக்களுக்கு இதைவிட வசதியான வீடுகளைக் கட்டித்தரவே பழைய வீடுகளை இடிக்கிறோம் என்று அந்நாட்டு அரசு சொல்லி மழுப்புகிறது.

ஆனால் இதை ஏற்க மறுக்கும இங்கி லாந்து வெளிநாட்டு அமைச்சர் ஜேக்ஸ்டிரா கூறுகையில்,

"சிம்பாவேக்கு எதிராக சர்வதேச கிரிக் கெட் சபை நடவடிக்கை எடுததே ஆகவேண டும். சிமபாவேயில் நிலவுகிற மனித உரிமை மீறல்களை ஐ.சி.சி தன்னுடைய கவனத் தில் எடுத்துக்கொள்ளவேண்டும் என்று இந்த நேரத்தில் வலியுறுத்த நாங்கள் விரும்பு கிறோம்.

இந்தப் பிரச்சினை குறித்து சர்வதேச கிரிக்கெட் சபைக்கு இங்கிலாந்து கலாசாரத் துறை அமைச்சர் டிசாஜோவெல், வெளி நாட்டு அமைச்சர் ஜேக்ஸ்டிரா ஆகியோர் அவசரமாக ஒரு கடிதம் அனுப்பியுள்ளனா. (அ-19)

## விளையாட்டு செய்திகள்




ரோஜர்ஸ் கோப்பை ரெனிஸ் பெண்கள் இரட்டையர் பிரிவில் சம்பியன் பட்டம் வென்ற மார்டினா நவரத்திலோவா - அன்னலேனா சோடியைப் படத்தில் காணலாம்.

# இந்தியாவின் முதல் 'ருவென்ரி - 20' ஏர் இந்திய அணி வெற்றி

இந்தியாவின் முதல் 'ருவென்ரி - 20' சம்பியன் கோப்பையை ஏர் இந்தியா அணி தனதாக்கிக் கொண்டுள்ளது.

நவீன கிரிக்கெட் என புகழப்படும் ருவெண்ரி - 20 போட்டி இந்தியாவில் முதல முறையாக பெங்களூரில் நடைபெற்றது. இத்தெடரில் ஆறு அணிகள் பங்குபற்றின.





கடந்த 21ஆம் திகதி நடைபெற்ற இத் தொடரின் இறுதிப் போட்டியில் ஏர் இந் திய அணி, கர்நாடக கிரிக்கெட் அணிகள் விளையாடியது.

இப்போட்டி மழை காரணமாக 17 ஓவர்க ளாக குறைக்கப்பட்டது. முதலில் துடுப் பெடுத்தாடிய கர்நாடக அணி 17 ஓவர்களில் 5 விக்கெற்றுக்களை இழந்து 117 ஓட்டங்களை எடுத்தது. இவ் அணி சார்பாக அதிகபட்ச மாக அகில் 20 பந்துகளில் 25 ஓட்டங்களை எடுத்துள்ளார்.

அடுத்து துடுப்பெத்தாடிய ஏர் இந்திய அணி முதல் பந்திலேயே பட்டேல் விக் கெற்றை பறிகொடுததது. இதன் பின் ஓயா, அணித்தலைவர் சுரேஷ் ரெய்னா இணைந்து விளாசினார்கள்.

இந்த சோடி இணைப்பாட்டமாக 95 ஓட்டங்களை எடுத்தது. ரெய்னா 37 ஓட்டங்க ளையும், ஓயா 66 ஓட்டங்களையும் எடுத் தனர். இறுதியில் ஏர் இந்திய அணி 16 ஓவரில 4 விக்கெற்றை இழந்து 121 ஓட்டங்களை எடுத்து வெற்றியை தனதாக்கிக்கொண்டு இந்தியாவின் முதல் 'ருவென்ரி - 20' கோப் பையை தட்டிச்சென்றது. இப்போட்டியின் ஆட்ட நாயகனாக ஓயாவும், தொட ஆட்ட நாயகன் விருதை ஏர் இந்திய அணித்தலை வர் சுரேஷ் ரெய்னாவும் பெற்றனர். (அ-19)

# உலக லெவன் அணியில் இரு இலங்கை வீரர்கள்

உலகில் டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட் டியில் முதன்மையாக உள்ள அவுஸ்திரே லியா அணிக்கும் உலக லெவன் அணிக் கும் இடையிலான சுப்பசீரிஸ் கிரிக்கெட் போட்டி எதிர்வரும் ஒக்டோபர் மாதம் அவுஸ திரேலியாவில் நடைபெறவுள்ளது.

ஒருநாள் போட்டிகள் ஒக்டோபர் மாதம 5ஆம், 7ஆம், 9ஆம் திகதிகளில மெல்பேர னிலும் டெஸ்ட் போட்டி சிட்னியிலும் நடை பெறவுள்ளது.

ரோம் நகரில் ஏற்பட்ட நிலநடுக்கத்தால், பொதுமக்கள் பெரும் பீதி அடைந்தனர். வீடுகள் மற்றும் கட்டடங்கள் குலுங்கியதை அடுத்து மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது.

இத்தாலி நாட்டின் தலைநகர் ரோம். இந்நகரத்தில் நேற்றுமுன்தினம் பகல் 2 மணிக்கு திடீரென நிலநடுக்கம் ஏற்பட்டது. ரிக்டர் அளவுகோலில் 4.4 எனப் பதிவாகி இருந்ததாக இத்தாலி சிவில் பாதுகாப்பு குழுவின் செய்தித் தொடர்பாளர் தெரிவித்தார்.

இதுகுறித்து இத்தாலி நாட்டின் தேசிய புவியியல் ஆய்வு மையம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில்,

ரோம் நகரிலிருந்து தென்மேற்கில் இருககும் கடற்கரை நகரமான அனஜியோவுக்கு அருகே கடலுக்குள் ஏற்பட்ட பூமி அதிர்ச்சி காரணமாக இந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது என்று தெரிவிககப்பட்டுள்ளது. நிலநடுககம் ஏற்பட்டதும், ரோம் நகரம் மற்றும் அதையொட்டியுள்ள கரையோர நகரங்களிலும் வீடுகள் மற்றும் கட்டடங்கள் குலுங்கின. மக்கள் அலுவலகங்களில் இருந்த வெளியே ஓடிவந்து அவரவர் வீடுகளுக்கு பயந்தபடியே விரைந்தனர்.

இந்த நிலநடுக்கத்தால் ரோம் நகர மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிப்புக்குள்ளானது. (து)

# 2006ஆம் ஆண்டு மார்ச்சுக்கு பின்பே 'அட்லான்டிஸ்' விண்ணில் ஏவப்படும்

(வோஷிங்டன்)

அமெரிக்க விண்வெளி ஓடமான 'அட்லானடிஸ்' 2006ஆம் ஆண்டு மார்ச் மாதத்துக்குப் பின் னரே விண் ணில் ஏவப்படும் என்று அமெரிக்க விண்வெளி ஆய்வு நிறுவனமான நாஸா தெரிவித் துள்ளது.

முன்னதாக அட்லான்டிஸ் விண்வெளி ஓடம் செப்டம்பர் மாதம் 22ஆம் திகதி விண்ணில் ஏவப் பட இருந்தது, ஆனால் இப்போது அதன் பயணம் அடுத்த அண்டு மார்ச் மாதம் வரை ஒத்திவைக் கப்படடுள்ளது.

கடந்த மாதம் டிஸ்கவரி விண்வெளி ஓடத்தை அமெரிக்கா விண்ணில் செலுத்தியது, டிஸ்கவரி வண்வெளி ஓடம் புறப்பட்டுச் சென்ற போது அதன வெளிப்புறத்தில் இருந்த எரிபொருள் காப்பு றையிலிருந்து நுரைபஞ்சுத் துண்டு ஒன்று பெயர் ந்து விழுந்தது. அது ஓடத்தின் இறக்கை மீது பட்டு இறக்கை சேதமடைந்தது.

இந்நிலையில் டிஸ்கவ[illegible] ஓடம் தனது பயணத்தை வெற்றிகரமாக[illegible] முடித்து கீழே இறங்குமா என்பது கேள்வி[illegible]றியாக இருந்தது. இருப்பினும் நாஸா [illegible]ஞானிகள் அதை பத்திரமாக தரையிறக்கினர்.

2003இல் கொலம்பியா விண்வெளி ஓடம் திரும்பும் வழியில் வெடித்துச் சிதறியதில் கல்பனா சாவ்லா உள்ளிட்ட விண்வெளி வர்ர்கள் உயிரிழந்தமை தெரிந்ததே.

கொலம்பியா விண்வெளி ஓடம் விபத்துக்கு உள்ளான கோளாறு மற்றும் அண்மையில அனுப்பய டிஸ்கவரி விண்வெளி ஓடத்தின் எரிபொருள் கலனில் ஏற்பட்ட குறைபாடு குறித்து ஆராயப்பட்டு புதிய ஓடத்தில் அவை சரி செய்யப்பட்ட பின்பே அட்லான்டிஸ் விண்வெளி ஓடம் விண்ணில் செலுத்தப்ப டும் என்று அமெரிக்க விண்வெளி ஆய்வு நிறுவனத் தலைவர் மைக்கேல் கிரி.்.பின் தெரி வித்துள்ளார். (ற)

# விண்நடை செய்த விஞ்ஞானிகள்

(கேப் கனவெரால்)

சர்வதேச விண்வெளி மையத்துக்கு வெளியே மிதந்த பல்வேறு சாதனங்களை மண்டும் ஆராய்ச்சி மையத்துக்குக் கொண்டு சேர்த்துள்ளனர் விஞ்ஞானிகள்.

பூமியிலிருந்து 350 கிலோமீற்றர் உயரத்தில் சர்வதேச விண்வெளி மையம் செயல்படடு வருகிறது. இங்கு இரு விஞ்ஞானிகள் நிரந்தரமாகத் தங்கி, ஆராய்ச்சி நடத்தி வருகின்றனர். செர்ஜி கிரிகலேவ், ஜான் பலிப்ஸ் ஆகியோர் அந்த விஞ்ஞானிகள்.

இந்நிலையில், இவர்கள் இருவரும் வியாழககிழமை சர்வதேச விண்வெளி மையத்திலிருந்து வெளியே வந்தனர். மையத்தின் வெளியே விண்வெளியில் மிதந்தவாறு இருந்த பல்வேறு சாதனங்களை மீண்டும் மையத்துக்குள் கொண்டு சேர்த்தனர். நீண்ட காலமாக இவை விண்வெளியில் மிதந்து வந்தன.

டிஸ்கவரி விண்கலம் புறப்பட்ட சில நாட்களுக்குள் இவர்கள் 'விண் நடை' மேற்கொண்டது குறிப பிடத்தக்கது.

இவர்கள் விண்வெளி மையத்தில் இல்லாத நேரத்தில் அமெரிக்காவின் ஹுஸ்டனிலும் ரஷஷயாவின் மொஸ்கோவிலும் உள்ள விண்வெளி விஞ்ஞானிகள் பணிகளைக் கவனித்தனர்.

செர்ஜி, ஜானின் விண்நடையின் முக்கிய நோக்கம் 'மாட்ரியோஷ்கா' கதிரியக்கத்தை அளவிடும் பொம்மையை எடுத்துவருவது தான்! மென்மையான பொருட்களால் செய்யப்பட்ட அந்த பொம்மை, சர்வதேச விண்வெளி ஆய்வு மையத்துக்கு வெளியே கடந்த ஆண்டு வைக்கப்பட்டது.

இதன்மூலம் கிடைக்கும் பல்வேறு முக்கியத் தகவல்களை வைத்து, நிலாவுககும் செவ்வாய்க் கிரகத்துக்கும் மனிதர்களை அனுப்பும் முயற்சியில் ஈடுபட அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சி மைய மான நாஸா திட்டமிட்டுள்ளது.

ஆய்வு மையத்துக்குக் கொண்டு செல்வதற்கு முன்னதாக இதைச் சுற்றியிருந்த உறையை விஞ்ஞானிகள் பிரித்தனர். அதை விண்வெளியில் தூக்கி எறிந்தனர்.

மேலும் சாதனங்களைத தூய்மைப்படுத்த பயன்படுத்திய துணிகளையும் தூக்கி எறிந்தனர்.

மேலும் ஒரு டிவி, காமிரவை பொருத்தினர். அடுத்த ஆண்டில் விண்வெளி ஓடம் வரும் போது இது பயன்படுத்தப்படும்.பல்வேறு சாதனங்கள் மீண்டும் ஆய்வு மையத்துக்குள் கொண்டு செல்லப்பட்டதால் அவற்றை மீண்டும் பூமிக்கு எடுத்துவர விஞ்ஞானிகளுக்கு வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. (ற)

# அரபு தேசத்திற்காக என்னை அர்ப்பணித்து விட்டேன்


## நண்பருக்கு சதாம் உசேன் உருக்கமான கடிதம்

அரபு தேசத்திற்காகவும், தாய்நாட்டில் வெளிநாட்டவர்களின் ஆக்கிரமிப்பிற்கு முற்றுப்புள்ளி வைப்பதற்காகவும் என்னை அர்ப்பணித்து விட்டேன் என ஈராக் முன்னாள் அதிபர் சதாம் உசேன் உணர்ச்சி பொங்க கூறியுள்ளார்.

. அமெரிக்க - பிரிட்டன் கூட்டுப்படையினர் மேற்கொண்ட அதிரடி நடவடிக்கையால் ஈராக்கில் சதாம் உசேன் ஆட்சி தூக்கி எறியப்பட்டது. கைது செய்யப்பட்ட சதாம் உசேன், அமெரிக்காவின் கட்டுப்பாட்டில் உள்ள சிறையில அடைக்கப்பட்டுள்ளார். கோர்ட் விசாரணைக்கு வரும்போது மட்டுமே அவரது புகைபபடங்கள் வெளியிடப்படும்.

ஆனால், சிறையில் இருந்தபடியே அவரது குடும்பத்தினருக்கு தொடர்ந்து கடிதஙகளை எழுதி வருகிறார். ஜோர்டான் நண்பர் ஒருவருக்கு சதாம் உசேன் எழுதிய கடிதத்தை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் வெளியிட்டுள்ளது. ஜோர்டான் நண்பரின் பெயரும், கடிதம் எழுதப்பட்ட தேதியும் அதில் குறிப்பிடப்படவில்லை. கடிதத்தில் சதாம் தெரிவிததுள்ளதாவது:

அரபு தேசத்திற்காகவும், சொந்த மண்ணில் - தாய்நாட்டில் வெளிநாட்டவர்களின் ஆக்கிரமிப்பிற்கு முற்றுப்புள்ளி வைக்கவும் நான் என்னை அர்ப்பணித்து விட்டேன். நாட்டின் பழைமையான வரலாறறை எண்ணிப் பார்க்க வேண்டும். அதன் மீது அன்பும், பாசமும் வைக்க வேண்டும்.



இல்லையென்றால், வாழ்க்கை அர்த்தமற்றதாகிவிடும். அன்புச் சகோதரனே, உனது மக்களை நேசி, பாலஸ்தீனத்தை நேசி, பாலஸ்தீனம் நீடுழி வாழ்க...

இவ்வாறு உருக்கமாக சதாம் தனது கடிதத்தில் எழுதியுள்ளார்.

இதற்கிடையே, சதாம் எழுதும் கடிதங்களின முக்கிய பகுதிகளை அமெரிக்க இராணுவத்தினர் 'எடிட்' செய்வதாக அவரது குடும்பத்தினர் குற்றம்சாட்டியுள்ளனர்.(து)

# கோபவெறியில் தனக்குத் தானே தீ மூட்டிக் கொண்ட இளம் பெண்

கடவுள் இந்த உலகத்தைப் படைக்கும் போது எல்லாவற்றிலும் சம நிலையோடு படைத்தான். இரவு என்ற ஒன்றை படைத்த கையோடு பகலையும் படைத் தான். ஆணை படைத்த கையோடு பெண்ணையும் படைத்தான். இந்த ஆண்-பெண் இருவருக்கும் பல குணாதிசயங்களை வைத்தான். எப்படி மகிழ்ச்சியை வைத்தானோ அதேபோல் துன்பத்தையும் வைத்தான். எப்படி சாந்தத்தை வைத்தானோ அதேபோல் கோபத்தையும் வைத்து விட்டான். இந்தக் கோபமும் மனிதனுக்கு வேண்டும்.அப்போது தான் அவன் மனிதன். ஆனால் அந்த கோபம் உணவில் கலக்கும் அளவான உப்பைப்போன்று தான் இருக்க வேண்டும். அளவுக்கு மீறினால் நஞ்சாக மாறிவிடும். அரசன் கோபம் கொண்டால் ஆட்சியை இழந்துவிடுவான். ஆண்டி கோபம் கொண்டால் பிச்சையை இழந்துவிடுவான். கணவன் கோபம் கொண்டால் மனைவி மக்களை இழந்துவிடுவான். காதலர்கள் கோபம் கொண்டால் காதலையே இழந்துவிடுவார்கள்.

கோபம் ஒரு மனிதனை எந்த அளவுக்கு பாதிக்கும் என்றால், சொத்துப்பத்துக்களை இழந்து,சொந்த பந்தங்களை இழந்து நடுத் தெருவில் நிறுத்தும் அதேகோபம் இன்னும் கொஞ்சம் அதிகமானால் அந்த மனிதனையே குற்றவாளியாக்கிவிடும்.

இந்த வரிசையில் காதலித்து திருமணம் முடித்த ஒரு பெண் கோபம் கொண்டு தன் உடலில் மண்ணெண்ணை ஊற்றித் தீ வைத்துக் கொண டதால் காதலித்த கணவன் படும் அவஸ்தை பரிதாபத்துக்குரியது.

தாம்பரம் அபிநாஸ் தெருவில் இருப்பது தான் சூசைராஜ்- யூலியா தம்பதிகள் வசிக்கும் வீடு. இந்த தம்பதியினருக்கு மூன்று பிள்ளைகள். அவர்களுள் மூத்தவன் ஆன்ட்ரூஸ் எம்.ஏ பட்டதாரி. கிண்டியில் ஒரு தனியார் கம்பணியில் வேலை பார்த்து வருகிறான்.விருதுநகரிலுள்ள குறிஞ்சி நகரில் வசிப்பவர் சேதுராமன்.இவரது ஒரே மகள் அஸ்வினி.எம்.கொம். படித்தவர்.தனியா கம்பனியில் வேலை பார்த்து வந்தவர்.

ஆன்ட்ரூஸ் கிறிஸ்தவ மதத்தைச்சார்ந்தவர். அஸ்வினி பிராமண குலத்தைச் சேர்ந்தவர்.எப்படியோ ஆன்ட்ரூஸ்க்கும் அஸ்வினிக்கும் இடையில் காதல் ஏற்பட்டு ஒருவரையொருவர் உயிருக்கு உயிராக ஏழு வருடங்கள் நேசித்து வந்திருக்கிறார்கள்.

இந்நிலையில் ஆன்ட்ரூஸ் தனது காதலை தன் பெற்றோரிடம் சொல்ல அவர்கள் மகனின் ஆசையை நிறைவேற்றும் நோக்கோடு சேதுராமன் வீட்டுக்கு சென்றிருக்கிறார்கள். வேற்று மதத்தைச் சார்ந்த ஒருவனுக்கு தனது மகளை திருமணம் செய்து கொடுக்க சேதுராமன் விரும்பாவிடினும் காதலுக்கு மதிப்புக் கொடுக்கவும் தவறவில்லை.அஸ்வினியும் ஆன்ட்ரூஸைத் தான் திருமணம் செய்து கொள்ள விரும்புவதாகத் தெரிவிக்கவே சேதுராமன் எனது மகள் உங்கள் மகனை விரும்புவதால் அவளைக் கூட்டிச்சென்று திருமணம் செய்து வையுங்கள் எனக் கூறியிருக்கிறார். அஸ்வினியும் வீட்டை விட்டுப்புறப்பட்டு மாமனார்- மாமியாருடன் அவர்கள் வீட்டுக்குச் சென்றிருக்கிறாள். தன் மகனின் ஆசையை நிறைவேற்ற இரு வீட்டாரின் சம்மதத்தோடு திருமணத்தை முடித்திருக்கலாம். ஆனால் அஸ்வினியின தந்தையை ஏதோ ஒன்று தடுத்திருக்கிறது. இருந்தாலும் தன் மகளின் விருப்பபடியே விட்டுவிட்டார். ஆன்ட்ரூஸசின் பெற்றோர்கள் அஸ்வினிக்கும் ஆன்ட்ரூஸ"ககும் திருமணம் செய்ய முடிவு செய்து பத்திரிகை அடித்து அப்பத்திரிகையில் அஸ்வினீயின் தாய் தந்தை பெயரையும் அச்சிட்டு இந்து முறைப்படி எப்படித் திருமணம் நடக்க வேண்டுமோ அதில் ஒன்றுகூடத்தவறாமல் செய்திருக்கின்றனர்.

இந்து முறைப்படி கோயிலில் திருமணம் நடந்திருக்கிறது

**அன்புள்ள பெற்றோர். ஆசையுடன் அரவணைக்கும் மாமன் மாமி. பாசத்தை அள்ளிச் சொரியும் கணவன். இத்தனையும் இருந்தும் கோபவெறி அஸ்வினியின் வாழ்க்கையுடன் விளையாடியது. விளையாட்டு வினையானதால் உடல் கருகி உயிர் நீத்தது அந்த இளம் சிட்டு. பேடகன்ற அன்றில் ஆனான் கணவன். விதி யாரை விட்டது?**

அதன்பின் ஆன்ட்ரூஸின் விருப்பப்படி அஸ்வினி கிறிஸ்தவராக மதம் மாறிய பின் சேர்ச்சில் கிறிஸ்தவ முறைப்படி திருமணம் கோலாகல மாக நடந்தேறியிருக்கிறது.

திருமணம் முடிந்த பின் அஸ்வினியும் ஆன்டரூஸ்சும் மிகவும் மகிழ்ச்சிகரமாக வாழ்கையைத் துவங்கியிருக்கிறார்கள். அது மட்டுமல்லாமல் அஸ்வினி படித்தவள் மட்டுமல்ல மிகவும் புத்திசாலி என்பதால் தனது எதிர்கால திட்டங்களையும் யோசனைகளையும் தனது மாமியாரிடம் செல்லியிருக்கிறாள்.

மாமியார்கள் என்றாலே பெரும்பாலும் மருமகளைக் கொடுமைப்படுத்துபவர்களாகத் தான் இருப்பார்கள்.ஆனால் இங்கேயோ அஸ்வினியை ஆன்ட்ரூஸின் தயார் தன் மகளைப் போல பாவித்து மிகவும் அன்பாக நடத்தியிருக்கிறார். அன்பான கணவன் பாசமிக்க மாமியார் கிடைத்துவிட்டால் ஒரு பெண்ணுக்கு என்ன குறை இருக்கப்போகிறது? அந்த அளவுக்கு அஸ்வினி பாக்கியசாலி. அவளும் அம்மா அம்மா என்று மாமியார் மீது பாசத்தை அள்ளிக் கொட்டினாள். நாலுபேர்மதிக்கக்கூடிய அளவுக்கு தங்கள் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்கான திட்டங்களையும் யோசனைகளையும் தன் மாமியாரிடம் சொல்லி மகிழ்வாள்.

ஆனால் விதி யாரை விட்டது? ஒரு நாள் விளையாட்டுத்தமாக கோபத்தோடு தன் கணவனை மிரட்ட மண்ணெண்ணெய்யை உடலில ஊற்றி தீ வைத்துக்கொள்வதாக நாடகமாட விளையாட்டு வினையாகி தீயின் கோரப்பிடியில சிக்கிக்கொண்ட அஸ்வினி தக்கு இரையாகிப்போனது வேதனையான விசயம்.

ஆன்ட்ரூஸ் படபடப்புடன் தீயை அணைக்கப் போராடியிருக்கிறான். இதனால் ஆன்ட்ரூஸ"க்கும் தீ காயங்கள் ஏற்பட்டுவிட்டது.

## 7 வருடக் காதல் 7 மாதத்தில் முடிந்த பரிதாபம்

யார் கண்பட்டதோ? அஸ்வினி அவசரப்பட்டு விட்டாள்.

திருமணம் முடிந்து 7மதங்களாக ஒன்று சேராத இரு சம்பந்திகளும் இந்தக் கோரச் சம்பவத்தால் ஒனறு சேர்ந்து அஸ்வினியின் உயிரைக் காப்பாற்ற முயற்சி செய்து வந்திருக்கின்றனர். என்ன தான் செலவானாலும் அஸ்வினியின் உயிரை காப்பாற்றியே தீருவது என்ற சங்கல்ப் பத்தோடு இரு குடும்பங்களும் ஒன்று சேர்ந்து போராடியிருக்கின்றன.

அஸ்வினியின் காதலுக்கு தடையாக இருந்தது யாதியும் மதமும்தான். ஆனால் இன்று தீயின் கோர சம்பவத்தால் அவள் உயிரைக்காப்பாற்ற அந்த யாதியும் மாதமும் இணைந்தேவிட்டது. இருந் தாலும் தான் தவறுதலாகச் செய்த காரியம்எத்தனைபேரைப் பாதித்துவிட்டது என அஸ் வினி கவலை கொண்டே இருந்திருக்கிறார்.

இப்படித் தவறுதலாக தவறுசெய்து விட்ட அஸ்வினியின் பெற்றோர்கள் என்ன நடந்தது? ஏன் நடந்தது என்று கேட்கவேயில்லை. மகளைககாப்பாற்றும்முயற்சியிலேயே இருந்திருக்கிறார்கள்.யாதியையும் மதத்தையும் பெரிதாக எண்ணிய அஸ்வினியின் பெற்றோர்கள் காதலுக்குத் தடைவிதிக்கவில்லை. மகளின் விருப்பத்திற்கே விட்டுவிட்டார்கள்.அதே போல அஸ்வினியின் வாழ்க்கையும் நன்றாகவே அமைந்தது.ஆனால் இரக்கமற்ற இயமனின் பாசக்கயிற்றுக்கு பாவம்,அஸ்வினி பலியாகிவிட்டாள். அஸ்வினியின் இறுதிச் சடங்கை இரு வீட்டாரும் கலந்து செய்து அஸ்தியை கடலில் கரைத்து விட்டனர்.

எழு வருடங்கள் காதலித்து காதலித்தவனையே திருமணம் செய்ய அஸ்வினி பெற்றோரையே உதறித்தள்ளிவிட்டு திருமணம் முடித்தது நியாயமா? இவர்கள் காதலுக்கு எதிர்ப்புத்தெரிவித்திருக்கிறார்களா என்ன சொல்லப் போகிறார்கள் அஸ்வினியின் பெற்றோர்கள்.

அப்பா அம்மாவினுடைய ஆசீர்வாத்துடனேயே பெண்கள் ஒவ்வொரு காரியத்தையும் செய்யவேண்டும். அவர்களது மனம் நோக ஒரு போதும் நடக்கக்கூடாது. காதல் என்ற மயக்கத்தில் தடம்புரண்டு பெற்றோரை உதாசீனம் செய்து விரும்பியவனை கல்யாணம் செய்யும் பெண்களுடைய வாழ்க்கை பிரச்சினைகள் தான் தலையெடுக்கும் என அஸ்வினியின் பக்கத்துவீட்டுப்பெண்கள் அபிப்பிராயம் தெரிவிக்கிறார்கள்.

படிக்க வைத்து தம் மகளுக்கு திருமணம் செய்து வைக்க வேண்டும் என்று முடிவெடுத்து மாம்பிள்ளை பார்த்தபின் அவர்களை எதிர்த்துததான் காதலித்தவனையே கட்டி வையுங்கள் என்று சொன்ன அஸ்வினியை அவள் விருப்பத்திற்கே விட்டது அஸ்வினியின் பெற்றோர்களது குற்றமா அல்லது தன் மகன் ஆசைபபட்ட பெண்ணையே கட்டி வைக்க வேண்டும் என்று அப்பெண்ணின் பெற்றோர்களிடம் முறைப்படி பெண்கேட்டு அவர்கள் மறுத்த பின் அப்பெண்ணை அழைத்துவந்து திருமணம் செய்து வைத்தது ஆன்ட்ரூஸின் பெற்றோர்களின் குற்றமா அல்லது காதலித்தவளின் கையைப்பிடிக்க வேண்டும் என்று ஆசைப்பட்டது ஆன்ட்ரூஸின் குற்றமா? அல்லது பெற்றோர்களை உதறிவிட்டு வந்து நல்ல வாழ்க்கை கிடைத்தும் கோபத்தால் விளையாட்டை வினையாக்கியது அஸ்வினியின் குற்றமா?

இவர்கள் அனைவரின் மீது யாருமே குற்றம் சொல்லவில்லை. இங்கு உணர்ச்சிகளின் போராட்டம் தான் நடந்துகொண்டிருக்கிறதே தவிர பகை உணர்ச்சிகளின் போராட்டம் இல்லை. அங்கு அஸ்வினி பிறந்த குடும்பத்தவருக்கு யாதி,மதம் ஒருபக்கம் இருந்தாலும் காதலுக்கு மரியாதை கொடுத்திருக்கிறார்கள். இங்கு புகுந்த வீட்டில் ஆன்ட்ரூஸின் குடும்பத்தவர்கள் பெண் வீட்டார் எதிர்ப்பு இருந்தாலும் தங்களை நம்பி வந்த பெண்ணை மருமகளாக ஏற்றுக்கொண்டு காதலுக்கு மரியாதை கொடுத்திருக்கிறார்கள். காதலர்களும் பெற்றோர்களும் அதிகமாக காதலுக்கு மரியாதை கொடுத்ததனாலோ என்னமோ அஸ்வினியின் வாழ்வு தொலைந்து விட்டது.

தான் அமோகமாக நேசித்து திருமணம் செய்து கொண்ட மனைவி கருகிப்போன தால் மனம் இடிந்து காய்ந்து கிடக்கும் பரிதாபம் ஆன்ரூஸ"க்கு இப்படியான ஒரு நிலைமை எந்தக காதலர்களுக்கும் வந்துவிடக் கூடாது. ஏழுவருடங்கள் உயிருக்கு உயிராக நேசித்து எழு மாதம் குடும்பம் நடத்தி கருத்துவேறு பாட்டினால் நடந்தது தான் இந்தக்கொடுமை. நல்ல காதலர்கள் இவ்வுலகில் வாழவேண்டும்.

ஆனால் ஆன்ட்ரூஸ்-அஸ்வினி காதல் பாதியிலே முடிந்துவிட்டது. இதற்கு என்ன காரணம்? கோபழ்! அவசரம்! இதனால்த்தான் அஸ்வினி புத்திசாலியாக இருந்தாலும் அவசரப்பட்டுவிட்டாள் என்றே சொல்ல வேண்டும். இதனால் அவளை சார்ந்த அந்தனை பேர் வாழ்விலும் சோகம் தான் சூழ்ந்துள்ளது. இந்நிலைமை யாருக்கும்,எந்தக் காதலர்களுக்கும் எந்தப் பெற்றோருக்கும் இனிமேல் வராமல இருக்கவேண்டும் என்றால் வாழ்கையில் ஒருவரையொருவர் புரிந்துகொண்டு விட்டுக்கொடுத்து கோபம் கொள்ளாமல் பெருந்தன்மையுடன் வாழ்ந்தால் நல்ல வாழ்க்கை அமையும். □

பொ. இராசதுரை

# —சகல பிரஜைகளையும்— பாதுகாப்பதே நமது கடமை

(கொழும்பு)

அரசியல் ரீதியாக பல்வேறு கொள்கைகளைக் கடைப்பிடித்த போதிலும் நாட்டில் வாழும் சகலரையும் பாதுகாப்பது எமது பொறுப்பாகுமென ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்றஉறுப்பினர் லக்ஷ்மன் யாப்பா அபயவர்த்தன தெரிவித்துள்ளார்.

மாத்தறை கஸ்மனப்பகுதியில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

கட்சி ரீதியாக பிளவுபட்டிருந்த போது சகலரும் மக்களுக்கு சேவையாற்றுவதற்காகவே அவர்களை பிரதிநிதித்துவப் படுத்துவதாகவும் தெரிவித்தார். கட்சியின் கொள்கைகளுடனும சகல பிரஜைகளையும் பாதுகாப்பதே முக்கியமானது எனவும் அவர் குறிப்பிட்டுளளார்.

அரசாங்க அதிகாரிகள் அனைவரும் இந்த நிலையை உணர்ந்து கொண்டு செவவனே செயற்படவேண்டும் என்றும் லக்ஷ்மன் யாப்பா அபயவர்த்தன வேண்டுகோள் விடுத்துள்ளார். (து-9)

# கேணல் கிட்டுவின் ஓவியக் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

மாவீரரான மூத்த தளபதி கேணல் கிட்டுவின் ஓவியங்கள் நல்லூர் ஆலய திருவிழாவை முன்னிட்டு ஆலய வீதியின் தென்மேற்கு மூலையில் அமைந்துள்ள தியாகி திலீபனின் நினைவுத் தூபிக்கு அருகாமையில் கண்காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

அனைத்துலக தொடர்பகத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்றுவரும் இக் கண்காட்சியில் கேணல் கிட்டுவின் எண்ணங்கள் சிந்தனையில் உருவான ஓவியங்கள் பல பார்வைக்கு வைக்கபபட்டுள்ளன. (ச)

# சரணாலயங்களின் நிலப்பரப்பு விஸ்தரிப்பு

(கொழும்பு)

இலங்கையில் சரணாலயங்களின் நிலப்பரப்பை மேலும் விஸ்தரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சுற்றாடல் துறை அமைச்சர் தெரிவித்துள்ளார்.

சரணாலயங்களுக்கு அண்மித்துள்ள வனப்பாதுகாப்புத் திணைக்களத்திற்குச் சொந்தமான காணிகளே ச்ரணாலயங்களின் விஸ்தரிப்புக்கு எடுக்கப்படவுள்ளதாக சுற்றாடல் துறை அமைச்சர் ஏ.எச் எம்.பௌசி தெரிவித்துள்ளார்.

வனவிலங்குகள் வசிப்பதற்கான நில்ப்பரப்பை அதிகரிக்கச் செய்வதன் மூலம் வன விலங்குகளுக்கும் மக்களுக்கும் இடையில் ஏற்படும் மோதல்களை தவிர்க்கலாம் என எதிர்பார்ப்பதாக அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

காட்டுயானைகள் மக்கள் பிரதேசங்களிற்குள் சென்று தாக்குவதை தவிர்ப்பதற்கு தற்போது மேற்கொள்ளப்படும் பாதுகாப்பு நடவடிக்கைகள் வெற்றியளித்து வருவதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (து-7)

# அவசரகால நிலை பற்றி ஐ.தே.க கட்சியின் நிலைப்பாடு

(கொழும்பு)

40 ஆண்டுகளுக்குப் பின்பு அவசர காலச் சட்டத்தை நடைமுறைப்படுத்தாமல் ஆட்சி நடத்திய ஒரே தலைவர் ரணில் விக்கிரமசிங்கவே என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

அவசர காலச்சட்டம் இல்லாமலேயே மக்களின அடிப்படை உரிமைகளையும் ஜனநாயக உரிமைகளையும் நாம் பாதுகாத்துக்கொடுத்தோம்.

அவசரகாலச் சட்டத்தின் மூலம் இந்த நாட்டு மக்களின், மாணவர்களின் எதிர்ப்பு நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த அரசு முயற்சிககுமானால் அதற்கு இடமளிக்கப் போவதில்லை. நாட்டின் ஆட்சியாளர்கள் தமது அரசியல எதிரிகளைப் பழிவாங்குவதற்காக அவசரகாலச சட்டத்தை பயன்படுத்த இடமளிக்கப் போவதில்லை.

தேர்தல்களைப் பின்போடுவதற்காக அரசாங்கம் அவசரகாலச் சட்டத்தைப் பயன்படுத்துமேயானால் அதற்கு இடமளிக்கப் போவதில்லை எனவும் கலாநிதி ராஜித சேனாரத்தன கருத்துத் தெரிவித்துள்ளார். (து-2)

ஊதியம் என்பது ஒருவற்குப் பேதையார்
கேண்மை ஒரீஇ விடல் - குறள்

வலம்புரி

# உண்மையை உணர தவறும் ஊடகங்கள்

இலங்கையின் ஊடகத்துறைக்கு இருக்கக் கூடிய சுதந்திரம் பற்றிப்பேசுவதில் அர்த்தம் ஏதும் இருப்பதாகத் தெரியவில்லை. ஜனநாயகத்தை பாதுகாக்கும் நான்கு தூண்களில் பத்திரிகைகளும் ஒன்று என்பது ஏற்றுக் கொள்ளப்பட்ட முடிபு.

இங்கு பத்திரிகை என்ற பதம் தொழில் நுட்பத்தின் வேகம் காரணமாக ஊடகத்துறையாக மாற்றம் பெற்றுள்ளதால் முன்னைய வரைவிலக்கணத்தில் சிறிய மாற்றம் செய்து ஜனநாயகத்தை பாதுகாக் கும் நான்கு தூண்களில் ஊடகத்துறையும் ஒன்று என கூறிக்கொள்ளலாம்.

வரைவிலக்கணத்தை மாற்றிக்கொண்டாலும் அந்த வரைவிலக்கணம் எந்தளவு தூரம்நடைமுறைப்படுத்தப்படுகின்றது என்பதிலேயே அதன் கனதி தங்கியுள்ளது.

இலங்கையைப் பொறுத்தவரை ஜனநாயகத்தை பாதுகாக்கும் தூண்களில் ஊடகத்துறையும் ஒன்று எனக் கூறினால் அது இந்த நூற்றாண்டின் முதற் தரப்பொய்யாக இருக்கும்.

ஜனநாயகமே இல்லாத நாட்டில் ஊடகத்துறை எவ்வாறு ஜனநாயகத்தின் தூண்களாக இருக்க முடியும் என்ற கேள்வி உங்களிடம் எழுவது நியாயமானதே.

அதேநேரம் ஜனநாயகம் இல்லாத நாட்டில் ஊட கத்துறை இயங்குகின்றதெனில் அவை எதற்காக இயங்குகின்றன என்ற கேள்வி எழுமாயின் அதற்கு எல்லை இடுவது கடினமாகவே இருக்கும்.

இலங்கையில் ஜனநாயகம் இல்லை என்பது வேறுவிடயம். ஆனால் இங்கு ஊடகம் உண்டு. அது தொடர்பான அமைப்புக்கள், சங்கங்கள் உண்டு. ஆகவே ஜனநாயகம் இல்லாத நாட்டில் அதனை ஏற்படுத்துவது ஊடகத்துறையின் தலையாய கடமையாகும்.

எனினும் அந்தக் கடமையைச் செய்வதில் இலங்கையில் இயங்கும் அனைத்து ஊடகங்களுமே தவறிழைத்து விட்டன என்றே கூறவேண்டும்.

சுருங்கக் கூறின் இலங்கையில் உள்ள ஊடகங்கள் தமது இருப்பையும், இலாபத்தையும் உறு திப்படுத்திக் கொள்வதில் அக்கறையாக இருந்தன வேதவிர அவற்றுக்கு ஜனநாயகம் பற்றிய சிந்த னை இம்மியும் இருக்கவில்லை.

குறிப்பாக தென்னிலங்கையில் உள்ள ஊடகங்கள் நாட்டின் பிரதான கட்சிகளினதும், பௌத்தபீடங்களினதும் கைப்பொம்மைகளாக-துதிபாடும் தோத்திரத்திரட்டுக்களாகவே இருந்தன. அவற்றுக்கு ஜனநாயகத்தை பாதுகாக்கும் எண் ணம் இருக்கவில்லை.

சிங்கள ஆட்சியாளர்களால் தமிழ் மக்கள் அடி மைப்படுத்தப்பட்ட போது-கொலை செய்யப்பட்ட போதெல்லாம் மௌனம் சாதித்த ஊடகங்கள் அந்த மௌனத்துடன் மட்டும் நின்று விடாமல் உண்மைகளை மறைத்து இனத்துவேஷம்கக்கின.

உண்மைகள் மறைக்கப்படுவதே ஜனநாயகத்தின் இழப்பிற்கான முதலாவது அறிகுறியாகும். இந்த நாட்டில் சகல இன மக்களும் ஒற்றுமையாக-சகல உரிமைகளும் பெற்று வாழ வேண்டும் என ஊடகங்கள் நினைத்திருந்தால் கடந்த இருபது வருடகால யுத்தம் என்பது தேவையற்றதாக இருந் திருக்கும். உண்மைச் செய்திகளை மறைத்து தமிழர் கள் சிங்களவர்களின் எதிரிகள் என்ற பாங்கில் வடிவ மைக்கப பட்டசெய்திகளே இந்த நாட்டை குட்டிச் சுவராக்கியது. இந்த உண்மையை ஊடகங்கள் உணரத்தவறின. தம்முள்ளான ஒற்றுமையை காக்கத் தயங்கின. இதன் விளைவாக ஊடகத்திற்கான சுதந்திரமே பறி போகலாயிற்று.

# ஒஸ்லோ பேச்சுக்களில் கருணா விவகாரம் அரசியல் ரீதியாக முக்கிய இடத்தைப் பெறும்

(கொழும்பு)

அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பிற்கும் இடையே நோர்வே தலைநகர் ஒஸ்லோவில் யுத்த நிறுத்த உடன்பாடு குறித்து பேச்சுவார்த்தை நடைபெறவுள்ளது. இப் பேச்சுவார்த்தைகளில் வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் கொலையும் கருணா குழு விவகாரமும் முக்கிய இடம் பெறலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

அரசாங்கம், வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் கொலைககு தமிழீழ விடுதலைப்புலிகளே காரணம் என குற்றஞ் சாட்டியுள்ளது அதேவேளை, படையினரின் உதவியுடன் கருணா குழுவினர் தம் மீது மேற்கொண்டுவரும் தாக்குதல்களால விடுதலைப்புலிகள் சீற்றமடைந்துள்ளனர்.

இந்த இரு விடயங்களாலும் தமிழீழ விடுதலைப் புலிகளும் அரசாங்கமும் யுத்தத்தில் ஈடுபடுவதற்கு பதில் பேச்சுவார்த்தை மேசைகளில் தீர்வு காண்பதற்கு இணங்கியுள்ளமை வரவேற்கத்தக்க செயலாகும். எனினும் இப்பேச்சு வார்த்தை கடினமானதாக அமையப்போவதுடன் இதில் வெற்றி பெறுவதற்கு கடும் முயற்சி அவசியம். ஜனாதிபதி தேர்தல் நடைபெறவுள்ளதாகவும் தனது அரசியல் ஏற்பாடுகளைத் தவிர்ப்பதற்காக ஜனாதிபதி பாராளுமன்ற தேர்த லொன்றை நடாத்த எண்ணியுள்ளதாகவும் ஊகங்கள் வெளியாகியுள்ளதால் அரசாங்கத்தின் அரசியல் உறுதிப்பாடு கடும் சோதனைக்கு உட்படப் போகின்றது.

தமிழீழ விடுதலைப்புலிகளும் ஒஸ்லோ பேச்சுவார்த்தைகளை மிக அவதானமாகவே அணுகுவார்கள். கருணா விவகாரத்தில் விடுதலைப்புலிகள் விட்டுக்கொடுப்புக்களை மேற்கொள்வது மீளக்கடினமாக இருக்கும். அதேநேரம் இந்த பேச்சுவார்த்தை நோர்வேயின் சமாதானத் தூதுவர்களுக்கு கடும் இராஜதந்திர சவாலாக அமையப்போகின்றது.

இலங்கையின் யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் பார்வையாளர்கள் என்றவகையில் ஒஸ்லோ பேச்சுவார்த்தைகளில் கலந்துகொள்கின்றனர்.

அதேவேளை, பேச்சுவார்த்தைகளுக்குச் செல்வதும் அதனை வெற்றிகரமாக்குவதும் வேறு வேறு விடயங்கள் கருணா விவகாரத்தில் அரசாங்கத்திடமிருந்து உறுதியான உத்தரவாதமொன்று விடுதலைப்புலிகளுக்கு கிடைப்பது அவசியம் என சுட்டிக்காட்டும் தமிழ் தரப்பினர் அவ்வாறான உத்தரவாதங்கள் கிடைக்காது விட்டால் விடுதலைப்புலிகள் இடைநடுவில பேச்சுவார்த்தைகளிலிருந்து வெளியேற நேரிடலாம்.

இதேவேளை, கருணா விவகாரம் அரசாங்கத்திற்கும் முக்கியமான சவாலாக அமையப்போகின்றது. கருணாவைக கைது செய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்வதோ அல்லது கருணாவுக்கான ஆதரவை வாபஸ் பெறுவதோ அரசாங்கத்திற்கு சுலபமாக அமையாது. இராணுவத்தின் ஒரு பகுதியினரோ, அல்லது அரசாங்கமோ கருணாவுக்கு ஆதரவு வழங்குகின்றது என்ற அடிப்படையில் சிந்திக்கும்போது அரசியல் ரீதியாக இது சுலபமான வடயமாக அமையாது என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (அ-4)

# இலங்கை போக்குவரத்துச் சபை உருவாகும் போது ஊழியர் எண்ணிக்கை அரைவாசியாகக் குறையும்

(கொழும்பு

இலங்கைப் போக்குவரத்து சபையை மீண்டும் உருவாகும் போதும் அதன் ஊழியர்களின் எண்ணிக்கையைக் குறைப்பது குறித்து அரசாங்கம் கவனம் செலுத்தி வருகின்றது.

கொத்தணி பஸ் நிறுவனங்களில் தற்பொழுது 40 ஆயிரம் ஊழியர்கள் கடமையாற்றி வருகின்றனர்.

இலங்கைப்போக்குவரத்து சபையை மீண்டும் உருவாக்கும் போது அந்த எண்ணிக்கையை 25 ஆயிரமாகக் குறைப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.ஊழியர்களைக் குறைக்கும் நடவடிக்கையில் ஓய்வு பெறுவதற்கான வயதெல்லையை அண்மித்துள்ளவர்களை ஓய்வு பெறச்செய்யவும் ஏனையோருக்கு குறிப்பிடத்தக்க அளவு நட்ட ஈடுத்தொகை ஒன்றை வழங்கவும் திட்டமிட்டுள்ளதாக பிரதிப் போக்குவரத்து அமைச்சர் வஸந்த அழகியவர்ண தெரிவித்துள்ளார்.

இலங்கை போக்குவரத்து சபையை விரைவில் மீண்டும் ஏற்படுத்த அண்மையில் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.எதிர்வரும் ஒரு மாத காலத்துக்குள் இது தொடர்பான ஒரு சட்டமூலத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக பிரதிப்போக்குவரத்து அமைச்சர் தெரிவித்துள்ளார்.அதற்கு முன்னர் இந்த நடவடிக்கை அரசியல் அமைப்புக்கு ஏற்ற முறையில் உள்ளதா? என்பது பற்றி ஜனாதிபதி உயர் நீதிமன்றத்தின் கருத்தை அறியவுள்ளார் என்றும் பிரதியமைச்சர் வஸந்த அழகியவர்ண மேலும் தெரிவித்துள்ளார். (அ-2)

# கணனி மூலம் குற்றச் செயல்களைத் தடுக்க சட்ட மூலம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பு

(கொழும்பு

கணனிகள் மூலம் மேற்கொள்ளப்படும் குற்றச் செயல்களால் தேசிய பாதுகாப்பு, மக்கள் பாதுகாப்பு மற்றும் பொருளாதாரம் ஆகியவற் றுக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக நீதியமைச்சர் டி.ஜே. செனவிரத்ன நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையை மாற்றியமைக்க கணனிகள் மூலம் குற்றச் செயல்களில் ஈடுபடுபவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுகக புதிய சட்டம் கொண்டுவரப்பட வேண்டும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

அதனடிப்படையிலேயே இந்தப் புதிய சட்ட மூலம் சமர்ப்பிக்கப்படுவதாக இதற்கான சட்ட மூலத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்துப் பேசும் போது அமைச்சர் இதனைத் தெரிவித்துள்ளார்.

கணனிகள் மூலம் ஏற்படும் குற்றச்சாட்டுக்களை மூன்று வகைகளாகத தரப்படுத்தலாம் என்று அமைச்சர் மேலும் தெரிவிததுள்ளார். கணனிக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பான சட்ட மூலம் காலத்திற்கேற்ற ஒன்று என்று விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய ஐக்கியதேசியக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, நாட்டில் தற்போது அதிகரித்துவரும் குற்றச் செயல்களை தடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் கணனிகள் மூலம் மேறகொள்ளப்படும் குற்றச் செயல்களைத் தடுப்பதற்கு சட்ட மூலத்துக்கு ஏற்ப வெளிநாடுகளுடனும் தொடர்புகளை ஏற்படுத்திககொள்ள எடுக்கப்பட்டுள்ள தீர்மானத்தை வரவேற்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான நடவடிக்கை எடுக்கும் அதிகாரம் நீதிமன்றங்களுக்கு மட்டும் மட்டுப்படுத்தப்படலாகாது என்றும் அவர் மேலும் கூறியுள்ளார். (அ-2)

# யுத்த நிறுத்தம் உறுதியாகப் பேணப்பட இந்தியா வற்புறுத்தல்

(கொழும்பு)

இலங்கையில் தொடர்ந்து இடம்பெற்று வருகின்ற வன்முறைகள் ஒரு முடிவிற்கு வரவேண்டும் அத்துடன் இனப் பிரச்சினைக்கு நிலையான தீர்வொன்றைகாண வேண்டும் என இந்தியா தெரிவித்துள்ளது.

அண்மையில் இந்தியாவிற்கு விஜயத்தை மேற்கொண் டுள்ள எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் விஜயத்தையொட்டி வெளியிடப்பட்ட அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

சகல இனங்களினுடைய அபிலாசைகளையும் உள்ளடக்கிய முழுமையான தீர்வொன்றாகவே பேச்சுவார்த்தையின் மூலம் எட்டப்படும் தீர்வு அமைய வேண்டுமென வெளிவிவகார அமைச்சர் கே. நட்வர்சிங் மூலம் இந்தியா,ரணில் விக்கி ரமசிங்கவிடம் கேட்டுள்ளது. சகல மக்களினதும் அடிப்படை உரிமைகளைப் பேணக்கூடிய தீர்வொன்றை இலங்கை பிரதேச இறையாண்மைக்குட்பட்டதாக காணவேண்டியதன் அவசியத்தையும் இந்தியா வலியுறுத்தி யுள் ளது இந்தியாவின் இலங்கை இனப்பிரச்சினை தொடர்பான நிலைப்பாட்டில் எந்த மாற்றத்தையும் கதிர்காமரின் மறைவு ஏற்படுத்தவில்லையென்பதையே இந்தியாவின் இந்த அறிவிப்பு சுமடிக் காட்டிநிற்கிறது. (து-4)

# அரசு - புலிகள் பேச்சு தோல்வியடைய அணிதிரளுமாறு ஜே.வி.பி கோரிக்கை

(கொழும்பு


ஜனாதிபதி சந்திரிகாவும் சமாதான முகவர்களும் தேவைக்கு ஏற்ப மேற்கொண்டுள்ள பொய்யான சமாதான பேச்சு வார்த்தைகளுக்கு எதிராக ஒன்று திரண்டு அதனைத் தோல்வியடையச் செய்ய அனைவரையும் அணிதிரளவேண்டுமென ஜே.வி.பி.தெரிவித்துள்ளது.

உயிரிழந்த லக்ஷ்மன் கதிர்காமருக்குச் செய்யும் நன்றிக் கடன் இதுதான் என்றும் அக்கட்சி தெரிவித்துள்ளது.

விடுதலைப்புலிகளைச் சாந்திப்படுத்துவதற்கு மேற்கொள்ளப்படும் பொய்யான சமாதான பேச்சுவார்த்தைகளை நிராகரிப்போம் என்ற தலைப்பில் ஜே.வி.பி. அரசியல்பீடம் விடுத்துள்ளது அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளது. (து-4,2)

## தினசரி தியானம்

### விவேகச் சிந்தனைகள்



நமது ஆன்மாவின் பெருமையில் நம்பிக்கையின்மையே நாத்திகம் என்று வேதாந்தம் கூறுகிறது. சந்தேகமின்றி பலருக்கு இது பயங்கரக்கருத்துதான். இது அடைய முடியாத குறிக்கோள்என்று நம்மில் பலர் நினைக்கலாம். ஆனால் இதை ஒவ்வொரு மனிதனாலும் அடைய முடியும் என்று வேதாந்தம் வலியுறுத்துகிறது.

சுவாமி விவேகானந்தர்

# இலங்கையில் அமைச்சர்களின் எண்ணிக்கை அதிகமாகிவிட்டது!

(கொழும்பு)

இலங்கை அமைச்சரவையின் எண்ணிக்கை அதிகமாகக் காணப்படுவதாக ரான்ஸ் பெரன்ஸி இன்ரர்நெஷனல் அமைப்பு விமர்சித்துள்ளது. இலங்கை போன்ற நாட்டில் இவ்வாறு அதிகமான அமைச்சரவை காணப்படுவது அடிப்படையற்ற சம்பிரதாயம் எனவும் அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

இதற்கு எதிராக மக்கள் மத்தியில் எதிர்க் கருத்துக்கள் தோன்ற வேண்டும். இல்லாவிட்டால் இது தொடர்ந்து செல்லுமெனவும் அந்த அமைப்புக் குறிப்பிட்டுள்ளது.

தற்பொழுது அரசாங்கத்தில் இருவரைத் தவிர ஏனையவர்கள் அமைச்சர்களாகவும், பிரதி அமைச்சர்களாகவும் இருக்கின்றனர்.

இவ்வாறு இருப்பதால் நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதிக்கும் அமைச்சரவையைக் கண்காணிப்பது கடினம் என அந்த அமைப்புத் தெரிவித்துள்ளது. (ந-4)

# சேது சமுத்திரத் திட்டத்திற்கு எதிராக நேற்றுக் கொழும்பில் ஆர்ப்பாட்டம்!

சேது சமுத்திரத்திட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்று கொழும்பில் உள்ள இந்தியத் தூதரகத்திற்கு முன்பாக மதியம் 12 மணியளவில் ஆர்ப்பாட்டம் ஒன்று நடைபெற்றது.

சேது சமுத்திரத்திட்டத்திற்கு எதிரான மக்கள் இயக்கம் ஒழுங்குசெய்த இந்த ஆர்ப்பாட்டத்தில் சேது சமுத்திரத்திட்டத்தினை கைவிடவேண்டுமென ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் வலியுறுத்தினர்.

சேது சமுத்திரத்திட்டத்தினால் சூழலுக்கு ஏற்படக்கூடிய பாதிப்புக்கள் குறித்து தெளிவான அறிக்கைகள் தம்மிடம் இருப்பதாக சுட்டிக்காட்டிய ஆர்ப்பாட்டக்காரர்கள், இதன் காரணமாகவே இத்திட்டத்தை எதிர்ப்பதாக தெரிவித்தனர்.

இத்திட்டத்தினால் இலங்கையில் உள்ள ஒவ்வொரு குடிமகனும் பாதிக்கப்படுவதாக சுட்டிக்காட்டியுள்ள சேது சமுத்திரத்திட்டத்திற்கு எதிரான மக்கள் இயக்கம், அனைத்து இலங்கையர்களும் இத்திட்டத்தை எதிர்க்க வேண்டுமெனவும் கேட்டுக்கொண்டுள்ளது.

15 இலட்சத்திற்கும் அதிகமான தமிழ் நாட்டு மீனவர்கள் பாதிக்கப்படவுள்ளார்கள். எனினும் இந்திய மத்திய அரசு தொடர்ந்து பிடிவாதப்போக்கையே கடைப்பிடித்து வருகின்றதென சேது சமுத்திரத்திட்டத்திற்கு எதிரான மக்கள் இயக்கம் மேலும் தெரிவித்துள்ளது.

இதேவேளை இலங்கை பசுமை இயக்கத்தின் ஏற்பாட்டில் சேது சமுத்திரத்திட்டத்திற்கு எதிரான ஆர்ப்பாட்டம் ஒன்று இன்று புதன்கிழமை மதியம் 12.30 மணியளவில் கொழும்பு கோட்டை ரயில் நிலையத்திற்கு முன்பாக நடைபெறவுள்ளது. (4)

## ஜனாதிபதித் தேர்தல்

# மகிந்த ராஜபக்ஷ வெற்றிபெறுவார்; மக்கள் அபிப்பிராய மதிப்பீடு

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலில் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ வெற்றிபெறுவாரென இலங்கை வாக்காளர்களில் 63 சதவீதமானோர் நம்பிக்கை கொண்டுள்ளனர் என்று சர்வதேச பொது அபிப்பிராய மதிப்பீட்டின் மூலம் தெரியவந்துள்ளது.

நெதர்லாந்தின் பிரபல மக்கள் அச்சக மற்றும் அரசியல் நிலையம் நடத்திய மதிப்பீட்டின் அடிப்படையில் பிரதம மந்திரி மகிந்த ராஜபக்ஷ நம்பகமான கௌரவமான வேட்பாளரென மக்கள் கருதியுள்ளமை தெரிவந்துள்ளது. கடந்த மே மாதத்தில் 54 சதவீதமானோரே இத்தகைய அபிப்பிராயத்தை கொண்டிருந்தனர்.

எதிர்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்க நெருக்கடியான கால கட்டங்களில் ஜனரஞ்சகமற்ற தீர்மானங்களை மேற்கொள்பவர் எனவும் இந்த மதிப்பீட்டின்மூலம் தெரியவந்துள்ளது. (அ-2)

## கொக்குவில் இந்துவில் தமிழ்விழா

கொக்குவில் இந்துக் கல்லூரியின் தமிழ் மன்றம் நடாத்தும் தமிழ்த்தின விழா இன்று காலை 10 மணிக்கு கல்லூரியின் பஞ்சலிங்கம் கேட்போர் கூடத்தில் நடைபெறும்.

நிகழ்வில் ஓய்வுபெற்ற கோட்டக் கல்வி அதிகாரி திருமதி காங்கேயன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

தொடக்கவுரையை கல்லூரி அதிபர் பொ.கமலநாதன் நிகழ்த்துவார். (ந)

## வெளிவாரிப் பரீட்சை இன்று ஆரம்பம்

யாழ். பல்கலைக்கழக வெளிவாரிப் பரீட்சை இன்று ஆரம்பமாகின்றது.

2002ஆம், 2003 ஆம் ஆண்டு வெளிவாரி மாணவர்களுக்கான கலைமுதல் தேர்வுப் பரீட்சையே இன்று ஆரம்பமாகின்றது.

இப்பரீட்சை அடுத்த மாதம் 5 ஆம் திகதி வரை கோப்பாய் ஆசிரியர் கலாசாலையிலும், பின்னர் செப்ரெம்பர் 10 ஆம், 11 ஆம் 17 ஆம் திகதிகளில் நடைபெறும் பரீட்சைகள் கோப்பாய் ஆசிரியர் கலாசாலையிலும், யாழ். பல்கலைக்கழகத்திலும் நடைபெறவுள்ளது.

யாழ். பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டப்படிப்பு மாணவர்களின் பரீட்சை 2003 ஆம் ஆண்டுக்குப் பின்னர் தற்போதே நடைபெறுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ந-19)

# நிரந்தர வீடுகளை அமைக்க சகல தரப்பினரும் ஒத்துழைக்கவேண்டும்

## ஜனாதிபதி சந்திரிகா வேண்டுகோள்

சுனாமி அனர்த்தத்தில் பாதிக்கப்பட்டு தொடர்ந்தும் தற்காலிக குடியிருப்புக்களில் தங்கியுள்ள மக்களுக்கு நிரந்தர வீடுகளை அமைத்துக் கொடுப்பதற்கு சகல தரப்பினரதும் ஒத்துழைப்பு அவசியமென ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

அனர்த்தத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு மேலும் 40 ஆயிரம் வீடுகள் அமைக்கப்படும் தேவையுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

சுனாமி அனர்த்தத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வீடுகளை அமைத்துக்கொடுக்கும் திட்டம் தொடர்பாக ஜனாதிபதி மாளிகையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற வைபவம் ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

கரையோரத்தில் இருந்து 100 மீற்றர எல்லைக்குள் வசித்த மக்களுக்கு மேலும் 40 ஆயிரம் முதல் 45 ஆயிரம் வரையான வீடுகளை அமைக்கும் தேவையுள்ளது.

தற்போது 20 ஆயிரம் வீடுகளை அமைப்பதற்கான வேலைத் திட்டங்களையே ஆரம்பித்துள்ளோம்.

எனினும் இந்த வீடுகளை அமைக்கும் நடவடிக்கைகளை மட்டுமே ஆரம்பிக்க முடிந்துள்ளது.

பாரியளவிலான அத்திபாரம்கூட இது வரை போடமுடியவில்லை. இதுவொரு மிகப் பெரிய விடயம். இடம்பெயர்ந்துள்ள பெரும்பாலான மக்கள் தொடர்ந்தும் தங்களால் அமைக்கப்பட்ட வசதிகளற்ற குடிசைகளிலேயே வாழ்கின்றனர்.

இவர்களுக்கான நிரந்தர வீடுகளை அமைப்பதற்கான சகல திட்டங்களையும் நாம் உருவாக்கியுள்ளோம்.

இவற்றை மேற்கொள்வதற்கு எமக்கு சகல தரப்பினரதும் உதவிகள் தேவையாக உள்ளதென்றும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார். (அ-4)

## புலிகள் பேச்சுக்கு.....

சந்திப்புக் குறித்து விளக்கியதாகவும் விடார் ஹெல்கீசன் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளின் சம்மதத்தினை அரசாங்கத்திற்கு கடந்த வெள்ளிக்கிழமை அறிவித்ததாகவும் எனினும் ஜனாதிபதியுடன் நேற்று முன்தினமே தொடர்பினை ஏற்படுத்த முடிந்தமையினால் நேற்று முன்தினம் வெளிவிவகார அமைச்சர் ஜோன் பீற்றர்ஸன் இதனை ஜனாதிபதிக்கு அறிவித்ததாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை அரச சமாதான செயலகத்தின் பிரதிப் பணிப்பாளர் ஜோன் குணரட்ணவை நேற்று முன்தினம் காலை நோர்வேத் தூதுவர் ஹான்ஸ்பிரட்ஸ்கர் சந்தித்தார்.

இதன்போது லண்டனில் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகருடன் இடம்பெற்ற சந்திப்புக் குறித்து அவர் விளக்கியிருந்தார.

இருதரப்பினரும் சந்திப்பதற்கான இடம் மற்றும் திகதியை முடிவுசெய்வதற்கான நடவடிக்கைகளில் தற்போது நோர்வேத் தரப்பு ஈடுபட்டிருப்பதாகவும் விடார் ஹெல்கீசன் தெரிவித்தார்.

யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவினருக்கான அதிகாரங்களை அதிகரிப்பது குறித்து முடிவு செய்யப்படுமா என ஹெல்கீசனிடம் கேட்டபோது; இச்சந்திப்பானது யுத்தநிறுத்த உடன்படிக்கையினை முழுமையாக அமுல்படுத்தல் அதற்கான செயற்பாடுகள் என்பன குறித்து பேசப்படுவதற்காகவே ஒழுங்கு செய்யப்படுகிறது எனவும்,

யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் அதிகாரம் அதிகரிக்கப்படவேண்டுமா? என்பது பற்றி குறித்த இருசாராருமே முடிவு செய்யவேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

யுத்தநிறுத்த உடன்படிக்கையை முழுமையாக அமுல்படுத்துவது தொடர்பில் இடம்பெறவுள்ள சந்திப்பில் முஸ்லிம் பிரதிநிதிகளும் கலந்துகொள்ள அனுமதிக்கப்படவேண்டுமென முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தன்னிடம் கேட்டுள்ளதாகவும், அவரின் வேண்டுகோளை தான் சம்பந்தப்பட்ட இரு தரப்புக்கும் தெரியப்படுத்தவுள்ளதாகவும் தெரிவித்த ஹெல்கீசன், நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் சமாதான நடவடிக்கைகளிலிருந்து நீக்கப்பட்டதாக வெளியான செய்தியினையும் மறுத்தார். (ந-4)

## ரணிலின் வாசஸ்தலத்தை படம்பிடித்தவர் கைது

எதிர்க்கட்சித் தலைவரின் வாசஸ்தலம், கொழும்பிலுள்ள பிரதான பாடசாலை மற்றும் முக்கிய இடங்கள் சிலவற்றை படம்பிடித்த தமிழ் நபர் ஒருவர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டார். பிரஸ்தாப நபர் விசாரணைக்காக கறுவாத்தோட்ட பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

பொலிஸ் விசாரணையின்போது பிரஸ்தாப நபர், லண்டனில் வசிப்பதாகவும், விடுமுறையைக் கழிப்பதற்காக கொழும்புக்கு வந்துள்ளதாகவும் தெரியவந்துள்ளது. (ந-8)


## பதவி வெற்றிடம்

- கணனிப் பக்க அமைப்பாளர்கள் (பயிலுநர் -இருபாலாரும் - ஆண்கள் இரவுக்கடமை)
- அலுவலகச் செய்தியாளர்கள், கட்டுரையாளர்கள் (பயிலுநர் -இருபாலாரும்)
- விற்பனை முகாமையாளர் (ஆண்கள்)

கல்வித் தகைமை : க.பொ.த உயர்தரம் சித்தி

- இயந்திர இயக்குநர்கள் (ஆண்கள் - பயிலுநர் - இரவுக்கடமை)

குறிப்பு:

யாழ். நகர மையத்திலிருந்து 8 கிலோமீற்றர் தூரத்திற்குள் வசிப்பவர்கள் மட்டுமே விண்ணப்பிக்கவும்.

சுய விபரங்கள் அடங்கியதாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் யாவும் நிர்வாக உத்தியோகத்தர் வலம்புரி, இல.3 இரண்டாம் ஒழுங்கை, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு எதிர்வரும் 27 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கவும்.

நிர்வாக உத்தியோகத்தர்

தேவை
பெண் விற்பனையாளர்கள்
உணவு பரிமாறுபவர்கள்
Mango's (மாங்கோஸ்)
359/3 கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்
T.P: 021 222 6294
0777684131

நாதன்ஸ் சினிமா
குளிரூட்டப்பட்டது
யாழ்ப்பாணம்
சத்யராஜ், நமீதா நடித்த
இங்கிலீஷ்காரன்
(வடிவேலின் கலக்கல் நகைச் சுவையுடன்)
காலம்: 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)

நிறைஞ்சனாஸ்
சங்கானை
அர்ஜுன், சினேகா, கிரண், வடிவேலு சேர்ந்து கலக்கும்
கா.நே. 11.00, 2.45, 6.00 (பு.நே)






மனோகரா
யாழ்.
விக்ரம், சதா மற்றும் பலர் நடிப்பில்,
அந்நியன்
கா.நே: 10.30, 02.30, 6.30, 9.30


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 24.08.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.